


கைதேர்ந்த வேலைக்காரருக்காக தயாரிக்கப்பட்டது
IN A DRY PLAC
ஆப்டிகல் பைன்ஸ்
அஜாக்ஸ் பிராடக்ட்ஸ் லிமிடெட்,
106, அரண்மனைக்காரத்தெரு, சென்னை.
மானேஜிங் ஏஜண்ட்ஸ்:
மூருகப்பா & ஸன்ஸ், சென்னை.
தென் இந்தியாவுக்கு ஏகபோக விற்பனை ஏஜண்டுகள்:—
மார்ஷல் ஸன்ஸ் & கம்பெனி (இந்தியா) லிமிடெட்
தபால் பெட்டி நெ. 141
சென்னை.

PHYNAZOL



The Ideal

SOLID DISINFECTANT

பினைசால்-வீடுகள், ஆஸ்பத்திரிகள், காரியாலயங்கள், தொழிற்சாலைகள், சினிமா தியேட்டர்கள், சிற்றுண்டிச் சாலைகள் முதலிய இடங்களுக்கு மிகவும் இன்றியமையாதது.

கிருமிகள், பூச்சிகள், சக்கள், கரப்பு முதலியவற்றை அறவே ஒழிக்கவல்லது. மற்றெவ்வித கிரும நாசன திராவகத்தைக் காட்டிலும் இம்பது பங்கு வீரியமும், அடக்க சக்தியும் வாய்ந்தது. சுலபமாக ஓரிடத்திலிருந்து கொண்டுபோக மிகவும் சுலபமானது. தண்ணீரில் எளிதாகக் கரைவதுடன் இனிய மணமும் உள்ளது.

½ பவு. ரூ. 1-12-0. 1 பவு. 3-4-0
5 பவு. ரூ. 15-8-0. 10 பவு. 30-8-0
50 பவு. பவுண்டு ரூ. 3 வீதம்
உலோக டின்களில் கிடைக்கும்.

D. D. T. டின் ஒன்றுக்கு ரூ. 2/8 வீதம்
8 அவுன்ஸ் டின்களில் கிடைக்கும்

பினைசால் பெங்களூர் பப்ளிக் ஹெல்த் இன்ஸ்டிட்யூட் பெக்டீரியோலோஜிகல் டிபார்ட்மெண்டாரால் பரிசோதிக்கப்பட்டு பூரண திருப்திக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

R. W. Co. திறமை 5 லிருந்து 6 வரையும் நிரந்தர எமக்குறும் கூடியது.

பூரா விபரங்களுக்கு:

The
INDIA WATERPROOFING & DYEING WORKS
69.3, DHARAMTALA STREET, CALCUTTA
PHONE: CAL 448 GRAM TEXOLOUINO

டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: மைசூர், கூர்க்குக்கு
மெஸர்ஸ் [illegible] & கோ., மைசூர்
மலபார், கொச்சி, திருவாங்கூர், கோயமுத்தூர், வையநாடு, நீலகிரி ஜில்லாக்களுக்கு
மெஸர்ஸ் டி. ஸ்டேன்ஸ் & கோ., லிமிடெட், கோயமுத்தூர்.

உங்களுக்கு உழைத்துவரும்

சென்ற

40

வருடங்களாக

உங்கள் சேவையைக் கருதும்

NF-T

நாஷனல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
7. கவுன்ஸில் ஹவுஸ் ஸ்ட்ரீட், கல்கத்தா.

●

மதராஸ் பிராஞ்சு:
"நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்"
362, சைனாபஜார் ரோடு
எஸ்பிளனேட்

●

சப் ஆபீஸ்கள்:
பெங்களூர் :: மதுரை

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 இதழ் 10 | 1946 அக்டோபர் 6 | வியஹ புரட்டாசி 20

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

திருச்சி நேஷனல் காலேஜ்

வைரவிழா

கொண்டாட்ட நிதிக்காக



ஸ்ரீமதி

எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

ஞாயிற்றுக்கிழமை

20 - 10 - 1946 மாலை 6 மணிக்கு

பிரத்தியேகமாக நேஷனல் காலேஜில்
அமைக்கப்பட்டுள்ள பந்தலில்

★

சங்கீத ரத்ன
மைசூர் டி. சௌடய்யா - பிடில்
கல்பாத்தி ராமநாதன் - மிருதங்கம்
கோயமுத்தூர் ராஜையர் - கஞ்சிரா
ஆலங்குடி ராமச்சந்திரன் - கடம்

★

டிக்கட்டுகள் :—ஆதரவாளர் ரூ. 250/-
ரூ. 100/- ரூ. 25/- ரூ. 10/-

எல். என். எஸ். மணி, காரியதரிசி
வைரவிழாக் கமிட்டி

**சீக்கிரமாக
சௌக்யமாக மூக்
கினுள் ஏற்படும்
அடைப்புகள்
தவிர்க்கப்படும்**



ஜலதோஷம், தலைகனம், ஆகிய வற்றால் ஏற்படும் அவஸ்தையை அகற்ற 'கர்ஸோட்ரைன்' ஒரு நவீன சாதனமாகும். குழாயை படத்திலுள்ளபடி ஒவ்வொரு நாசித் துவாரத்திலும் வைத்து சுவாஸத்தை இருமுறை உள்ளே இழுக்க வேண்டும்.

நூதன 'இன்ஹேலர்' பையிலோ பர்ஸிலோ சுலபமாக எடுத்துச் செல்லக் கூடியது.

திருப்திகரமான குணம் 30 வினாடிகளில் தெரிய வரும். மூக்கினுள்ள மெல்லிய தோலின் வீக்கத்தை வடிய வைத்து சுவாஸ வழியிலுள்ள அடைப்புகளை அகற்றி தலையிலுள்ள கனத்தை அகற்றுகிறது. கர்ஸோட்ரைன் உபயோகத்திற்கும் எடுத்துக்கொண்டு போவதற்கும் மிகவும் எளிதானது. அணுக முடியாத இடங்களுக்கு கர்ஸோட்ரைன் ஆவிகள் சென்று ஆறுதலளிக்கின்றன. கர்ஸோட்ரைனை உபயோகித்து சுலபமாக சுவாசியுங்கள். குளிர் ஜுரம், தலைபாரம், ஆஸ்துமா முதலிய உபாதைகளுக்கு சிபார்சு செய்யப்படுகிறது.

கர்ஸோட்ரைன்

இங்கிலாந்தில்
E. கிரிப்பித் ஹக்ஹென் கம்பெனி
லிமிடெட்டாரால் தயாரிக்கப்பட்டது.

K. S. D. 4

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 10

என்ன சேதி?

தப்பிப் பிழைத்தோம்!

அப்பாடா! — ஒருவகையாகத் தப்பிப் பிழைத்தோம்! அடுத்த 1947-ம் வருஷம் வரையில் நாம் உயிர் பிழைத்திருப்போம். இந்தக் கண்ணாலே கிழக்கில் சூரியன் உதிப்பதை நிச்சயமாகப் பார்ப்போம். இந்தியாவின் இடைக்கால தேசிய சர்க்கார் பரிபூரண சுதந்திர சர்க்காராக மலர்ந்து இந்தியாவின் செல்வாக்கு உலக முழுவதும் பரவப் போவதையும் காண்போம். அடுத்த 'மகா யுத்தம் சீக்கிரத்தில் வந்து தொலையுமானால் அதையும் கண்ணாலே பார்க்கும் பேறு நமக்கு ஒரு வேளை கிடைத்தாலும் கிடைக்கலாம்.

சென்னை மாகாணப் பிரதம மந்திரி கனம் பிரகாசம் அவர்கள் சென்ற மாதம் 29-ம் தேதி பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டி விவரத்தைப் பத்திரிகைகளிலே படித்தவர்களுக்கு மேற்கண்டவாறு ஆசுவாசமும் நிம்மதியும் உண்டாகும். அன்றிரவு அவர்கள் சாப்பிட்ட குறைந்துபோன பிரேனில் அரிசிச் சாதம், பால் பாயஸத்தைப் போல் வாயில் இனித்துக்கொண்டு வயிற்றுக்குள்ளே சென்றிருக்கும்!

தங்கட்டூரு பிரகாசம் பந்துலுகாரு மேற்படி பேட்டியில் கூறிய முக்கியமான விஷயம் — என்னவென்றால், "உணவு ரேஷன் மேலும் குறைக்கப்படாது! படவே படாது!" என்பதுதான். சில நாளைக்கு முன்பு இதே கனம் பிரகாசம்காரு "வெளி நாட்டிலிருந்து எதிர்பார்த்த உணவுப் பொருள்கள் இன்னும் வராததால் அரிசி ரேஷன் எட்டு அவுன்ஸிலிருந்து ஆறு அவுன்ஸாகக் குறைக்கப்பட நேரிடலாம்!" என்பதாகச் சொன்னார். பதினாறு அவுன்ஸிலிருந்து அரிசி எட்டு அவுன்ஸாகக் குறைந்து ஏதோ குற்றுயிராக வாழ்க்கை நடத்தி வந்த சென்னை மாகாணவாசிகள் மேற்படி செய்தியைக் கேள்விப் பட்டதும் நிச்சயமாக 1947-ம் வருஷம் பிறக்கும் வரையில் உயிரோடிருக்க மாட்டோம் என்ற முடிவுக்கு வந்தார்கள். நல்ல வேளையாக, அவர்களுடைய அச்சத்தையும் சஞ்சலத்தையும் கனம் பிரகாசம் போக்கி, அபயப் பிரதானம் அளித்திருக்கிறார். "பட்டினியால் யாரையும் சாக விட மாட்டோம்" என்று வாக்குறுதி யளித்திருக்கிறார்!

நம்பிக்கை உதயம்!

மேற்படி முக்கியமான மாறுதலுக்குக் காரணம் கனம் பிரதம மந்திரி பிரகாசமும் உணவு மந்திரி ஸ்ரீ ராகவமேனனும் புது டில்லிக்குப் பிரயாணம் செய்து விட்டு வந்ததே யாகும். புது டில்லியில் கனம் பிரகாசம் மகாத்மா காந்தியின் தன்னம்பிக்கை உபதேசத்தைக் கேட்டதின் பயனாக முதலில் அவருக்கு "எப்படியும் சமாளித்து விடுவோம்" என்கிற மனோ தைரியம் ஏற்பட்டு விட்டது. அதோடு இடைக்கால தேசிய சர்க்காரின் உணவு மந்திரி பாபு ராஜேந்திர பிரஸாதைப் பேட்டி கண்டதில், "நெருக்கடி என்று ஏற்பட்டால் தேசிய சர்க்கார் நம்மைக் கைவிட்டு விட மாட்டார்கள்!" என்ற நம்பிக்கையும் உண்டாகி விட்டது. "நாங்கள் டில்லிக்குப் போவதற்கு முன்னாலேயே ராஜாஜி சென்னைக்கு அரிசி அனுப்பவேண்டிய அவசரத்தை பாபு ராஜேந்திர பிரஸாத்திடம் வற்புறுத்தி எங்கள் வேலையை மிகவும் சுலபமாக்கி விட்டார்!" என்ற விஷயத்தைக் கனம் ராகவமேனன் வெளிப்படுத்தி யிருக்கிறார். தேசிய சர்க்காரின் மந்திரிகள் வெளிநாடுகளிலிருந்து சென்னைக்கு உணவு தருவித்துக் கொடுக்கப் பெரும் பிரயத்தனங்கள் செய்வதாக வாக்களித்தது மட்டுமல்ல; இன்னொரு சௌகரியமும் செய்து கொடுத்திருக்கிறார்கள். தேசிய சர்க்காருக்கு முந்திய அதிகார வர்க்க சர்க்காரின் காலத்தில் ஒரு மாகாணம் இன்னொரு மாகாணத்தோடு நேர்முகப் பேச்சுவார்த்தை நடத்த முடியாமலிருந்தது. எது எப்படியானாலும், தலை போகிற காரியமா யிருந்தாலும், அதிகார வர்க்கத்துக்குத் தன்னுடைய ஜபர்தஸ்துதான் பெரிதா யிருந்தது. அந்த ஜபர்

தஸ்தை விட்டு விட்டுத் தேசிய சர்க்கார் மாகாணங்கள் நேரில் பேச்சு வார்த்தை நடத்த அநுமதி கொடுத்து விடவே நமது பிரதம மந்திரி பிரகாசம் டில்லியிலிருந்து வரும் வழியில் மத்திய மாகாணத்தில் இறங்கி அவ்விடத்து மந்திரி சபையுடன் பேரம் செய்து 5000 டன் அரிசி அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறார். இதெல்லாம் சாத்தியமாகும் வண்ணம் கனம் பிரகாசமும் கனம் ராகவமேனனும் செய்த முயற்சிகளுக்காக அவர்களைப் பாராட்டுகிறோம்.

அடுத்த வருஷம் எப்படி?

மேலே சொன்ன பிரகாரம் ஏதோ இந்த வருஷத்துக்கு ஒருமாதிரி பிழைத்தோம். ஆனால் அடுத்த 1947-ம் வருஷத்தில் எப்படி? அதற்கு அடுத்த வருஷத்துச் சங்கதி என்ன? இந்த வருஷத்தைப் போலவே அயல் நாட்டுக் கப்பல்களை எதிர்பார்த்துக் கொண்டு மேலும் காலங் கழிக்கப் போகிறோமா? இப்படிக் கெஞ்சு மணியம் செய்வதோடு கோடிக் கணக்கான ரூபாயையும் கொட்டிக் கொடுக்கப் போகிறோமா? —அல்லது இந்த மாகாண வாசிகளுக்கு வேண்டிய அரிசியையெல்லாம் இங்கேயே விளைவித்துக் கொள்ளப் போகிறோமா? இரண்டாவது முறையில் நிலைமையைச் சமாளிப்பதாயிருந்தால், அதற்கு இப்போதிருந்தே சரியான விவசாயத் திட்டங்களைத் தயாரித்துத் திறமையுடன் நடத்தி வைக்க வேண்டும்.

பர்மாவுக்கு யோகம்!

தேசிய சர்க்காருடைய தயவினாலும் சென்னை மந்திரிகளின் முயற்சியினாலும் இந்த மட்டும் பட்டினிச் சாவிலிருந்து பிழைத்தோமே என்று நாம் சந்தோஷப் பட்டுக் கொண்டிருக்கும்போது, "ஒரு லட்சம் டன் அரிசி இதோ இருக்கிறது. வேண்டுமா?" என்று நமக்குப் பின்னாலேயிருந்து ஒரு குரல் கேட்கிறது. யாருடைய குரல் என்று அறிந்து கொள்ளத் திரும்பிப் பார்த்தால், நம்முடைய சகோதர தேசமாகிய பர்மாவின் இடைக்கால சர்க்கார் தலைவராகிய மேஜர் ஜெனரல் ஆங் ஸான் அவர்களின் குரல்தான் என்று தெரிய வருகிறது.

"இதென்ன, பர்மாவுக்கும் ஒரு இடைக்கால சர்க்காரா? அதன் தலைவர் ஆங் ஸானா? அது யார் அது ஆங் ஸான்?" என்று வியப்புறுகிறோம்.


1946-ம் வருஷம் இந்தியாவின் சரித்திரத்திலே மட்டுந்தான் பொன்னெழுத்தால் பொறிக்கப்படுமென்றும், மேற்படி 1946-ம் வருஷம் இந்தியாவுக்கு மாத்திரமே புது வாழ்வும் புத்துயிரும் அளித்தது என்றும் நாம் கருதியிருந்தோம். ஆனால், இந்த அதிர்ஷ்ட வருஷம் இந்தியாவுக்குச் சுதந்தரம் அளித்ததுடன் நிற்கவில்லை. நமது சகோதர நாடாகிய பர்மாவுக்கும் சுதந்தரம் அளித்து பர்மியர்களின் அன்புக்கும் மதிப்பிற்கும் பாத்திரமாகியிருக்கிறது.

சரித்திரப்புகழ் பெற்ற மேற்படி எதிர்பாராத திடீர்ப் பிரகடனம் சென்ற மாதம் 27-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று வெளியாயிற்று. அதன்பிரகாரம் ஏறக்குறைய இந்தியாவின் அந்தஸ்து பர்மாவுக்கும் கிடைத்திருக்கிறது. கவர்னருடைய நிர்வாக சபை அங்கத்தினர் பதவிகளெல்லாம் பொதுஜனத் தலைவர்களுடைய கைக்கு வந்திருக்கின்றன. தற்காப்பு, நிதி, வெளிநாட்டு விவகாரம் முதலிய கேந்திர ஸ்தானங்களுக்கும் பர்மியர்களே நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களில் முக்கியஸ்தர் மேஜர் ஜெனரல் ஆங் ஸான். பர்மா ஜப்பானியருக்கு உட்பட்டிருந்தபோது, "பாஸிஸ்ட் எதிர்ப்பு முன்னணி"யை ஏற்படுத்தித் தீவிரமாகப் போராட்டம் நடத்திய தீரர் அவர். அதே தீரத்தை இப்போது பிரிட்டிஷ் அதிகாரத்திலிருந்து பர்மாவை மீட்பதிலும் காட்டி வெற்றியடைந்திருக்கிறார்.

இது நல்ல சகுனம்

சுதந்தரப் பாதையிலே இறங்கியிருக்கும் மேற்படி இடைக்கால பர்மா அரசாங்கம் ஏறக்குறைய இந்தியாவின் தேசிய அரசாங்கத்தை ஒத்திருக்கிறது. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் இருக்கிறது. பர்மா சர்க்காரில் பர்மாவிலுள்ள முக்கியமான எல்லா அரசியல் கட்சிகளும் இடம் பெற்றிருக்கின்றன. இந்தியாவின் முஸ்லிம் லீகைப் போல, யாரும் பிணங்கிக் கொண்டிருக்கவில்லை.


இந்திய தேசிய சர்க்காரில் பண்டித ஜவாஹர்லால்ஜி வகிக்கும் ஸ்தானத்தை பர்மா சர்க்காரில் மேஜர் ஜெனரல் ஆங் ஸான் வகிக்கிறார். அப்படிப்பட்டவர் "வேண்டுமானால் ஒரு லட்சம் டன் அரிசி அனுப்புகிறேன்!" என்று சொன்னதோடு நிற்கவில்லை. "இந்திய சர்க்காரின் தலைவர் பண்டித ஜவாஹர்லால் நேருவாயிருக்கையில் பர்மாவும் இந்தியாவும் ஒத்துழைப்பதில் என்ன தடை?" என்று சொல்லியிருக்கிறார். இந்தியா—பர்மாவின் வருங்கால நேசப் பான்மைக்கு இது மிகவும் நல்ல சகுனமாகும்.




பிரதம மந்திரி பிரகாசம்காரு பட்டு அவுன்ஸ் ரேஷன் ஆறு அவுன்ஸ் ரேஷனுக்குக் குறையாது என்று அபயப்பிரதானம் அளித்தார்.



பர்மா இடைக்கால சர்க்காரின் பிரதம ஆலோசகர் இந்தியாவுக்கு ஒரு லட்சம் டன் அரிசி அனுப்புவதாக வாக்குறுதி அளித்தார்.



ருஷ்ய வெளிநாட்டு மந்திரி மாலடோவ், ருஷ்யா இந்தியாவுக்குத் தன்னாலான உதவியைச் செய்ய விரும்புவதாகவும், ஆனால் தற்போது ஒன்றும் சௌகரியப்படவில்லை என்றும் கூறினார்.



தென்னாப்பிரிக்காவின் பிரதம மந்திரி ஜெனரல் ஸ்மட்ஸ் துரை இன்னும் ஒரு தலைமுறைக்கு யுத்தம் என்பது ஏற்படாது என்று உலகத்து மக்களுக்கு உறுதி கூறி உயிர்ப்பிச்சை அளித்திருக்கிறார்.

அக்டோபர் திட்டங்கள்

உலகம் உய்ய அவதரித்த காந்தி மகாத்மாவின் ஜன்ம தினக் கொண்டாட்ட வாரத்தில், அந்த மகான் இருக்கும் திக்கு நோக்கி வணக்கம் செலுத்துகிறோம்.

காந்தி மகானுக்கு உகந்த இரண்டு தலை சிறந்த நிர்மாணத் திட்டங்கள் இந்த மாதத்தில் சென்னை மாகாணத்தில் அமுலுக்கு வருவது பற்றி இம்மாகாண மக்களுக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.

மேற்படி நிர்மாணத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வரத் நிர்மானித்து அதைக் காரியத்திலே நடத்தத் தொடங்கியிருக்கும் சென்னை மாகாணத்துக் காங்கிரஸ் மந்திரி சபையைப் பாராட்டுகிறோம்.

* * *

அக்டோபரில் அமுலுக்கு வரும் மேற்படி இரண்டு திட்டங்களிலே ஒன்று மதுவிலக்குத் திட்டமாகும்.

சென்னை மாகாணத்தின் மூன்றில் ஒரு பகுதியிலே, எட்டு ஜில்லாக்களிலே, ஐம்பதினாயிரம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்திலே மதுவிலக்கு அமுலுக்கு வருகிறது.

மேற்படி பிரதேசத்தில் நாளது அக்டோபர் மீ 1௳ யிலிருந்து கள்ளும் சாராயமும் மற்ற லாஹிரி வஸ்துக்களும் விற்கக் கூடாது; வாங்கவும் முடியாது.

சர்க்கார் அதிகாரம் பெற்று நடந்து வந்த கள்ளு சாராயக் கடைகள் எல்லாம் மூடப்படும். இத்தனை காலமும் குடி என்னும் கொடிய அரக்கனுக்கு அடிமைப்பட்டிருந்தவர்களுக்குச் சில காலம் வரையில் இது மிகவும் தொல்லையாக இருக்கும்; பொறுக்க முடியாத வேதனையாகத் தோன்றும். இரண்டொருவர் தற்கொலை செய்து கொண்டு பிராணனை விடுவதாகக் கூடப் பயமுறுத்துவார்கள். சிலர் அப்படிச் செய்தே விட்டதாகக் கள்ளுக்கடைக் கண்டிராக்டர்கள் கதை கட்டி விடுவார்கள்.

ஆனால் உண்மையிலே 'கள்ளு சாராயக் கடைகளை மூடுவதைப்போல் பொது ஜனங்களின் நன்மைக்கு உகந்த திட்டம் வேறு ஒன்றுமே கிடையாது.

ஒருவனுடைய உயிரை வாங்குவதைவிட அவனுடைய அறிவைப் போக்குவது பாதகமான செய்கை. ஒருவனுடைய அறிவைப் போக்குவதைக் காட்டிலும் அவனுடைய மானத்தை வாங்குவது மிகப் பாதகமான செய்கை.

மதுபானமோ மனிதனுடைய ஆயுளைக் குறைக்கிறது; அறிவை மழுங்கச் செய்கிறது; அவனை மானமற்றவனாகவும் செய்து விடுகிறது.

மதுபானம் செய்ய ஆரம்பிக்கும்போது அதை வெட்கப்படத்தக்க காரியம் என்று எண்ணி ஒளிவு மறைவாகத் தான் குடிப்பார்கள். குடி வெறி ஏற ஏற, மானத்தைக் காற்றிலே பறக்க விட்டுப் பகிரங்கமாகக் குடிக்கத் தொடங்குவார்கள். குடி மயக்கத்தில் செய்யாத காரியங்களை யெல்லாம் செய்வார்கள்; பேசாத வார்த்தைகளை யெல்லாம் பேசுவார்கள்; தெருவிலே கிடந்து புரளுவார்கள்.

இதெல்லாம் எல்லா நாடுகளுக்கும் மக்களுக்கும் பொருந்தும். நமது நாட்டிலோ, குடியில் மற்றொரு பெரிய தீமையும் சேர்ந்திருக்கிறது. குடியின் மூலமாகச் சர்க்கார் ஏராளமான வருமானம் சம்பாதிப்பது என்று ஏற்பட்டிருக்கிறது. அற்ப சொற்ப வருமானமல்ல; மாகாணத்தின் மொத்த வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு; 45 கோடியில் 15 கோடி. இந்தப் பதினைந்து கோடியும் ஏழை எளிய மக்கள் கொடுக்கிறார்கள். தங்களையும் தங்கள் மனைவி மக்களையும் பட்டினி போட்டுக் கொண்டு மதுவரக்கனுக்குப் பணத்தைக் கொட்டுகிறார்கள். அப்படி ஏழை எளிய ஸ்திரிகள் குழந்தைகளின் துன்பத்திலிருந்து விளைந்த பணம், — அவர்களுடைய கண்ணீரில் நனைந்து அவர்களுடைய சாபத்துக்கு ஆளான பணம், — எந்த சர்க்காருக்கும் நன்மை செய்யாது. அதைக் கொண்டு என்ன நல்ல காரியத்தைச் செய்தாலும் அது ஒருநாளும் உருப்படாது.

"ஒரு சிலர் தானே குடிக்கிறார்கள்? குடித்தால் குடிக்கட்டுமே? நமக்கென்ன?" என்று குடிக்காதவர்கள் நினைப்பது பிசகு. வீட்டிலே பாம்பைப் பார்த்த பிறகு, "அது நம்மைக் கடிக்கவில்லையே? நமக்கென்ன?" என்று நினைப்பது போன்ற சர்வ மூட்டாள்தனம். பாம்பு உங்களை இன்று கடிக்காவிட்டால் நாளைக்கு உங்கள் குழந்தை

குட்டிகளைக் கடிக்கலாம். வீட்டிலே பாம்பு இருக்கிறது என்று தெரிந்த பிறகு அறிவாளி எவனும் நிம்மதியாகத் தூங்க மாட்டான். அதைக் கண்டு பிடித்துக் கொன்று விட்டோ, துரத்தி விட்டோதான் வேறு காரியம் பார்ப்பான்.

வேறு சில கற்றறி மூடர்கள், "வேத காலத்திலும் வள்ளுவர் காலத்திலுங் கூட மதுபானம் இருந்திருக்கிறது. இப்போது இருந்தாலென்ன?" என்று கேட்பார்கள். அரிச்சந்திரனுடைய காலத்திலே தீண்டாமை இருந்தது. அதனால் இப்போது தீண்டாமை இருக்கலாம் என்று யாராவது சொல்வார்களா? இராமருடைய காலத்தில் நர மாமிச பட்சணிகளான ராட்சதர்கள் இருந்தார்கள். அதனால் இப்போதும் நர மாமிச பட்சணம் இருக்கலாம் என்று சொல்வார்களா? கிருஷ்ண பரமாத்மாவின் காலத்தில் குழந்தைகளை வதைத்த கொடிய கம்ஸன் இருந்தான். அதனால் இப்போது குழந்தைக் கொலை இருக்கலாம் என்று ஏற்படுமா?

இத்தகைய காரணங்களினால்தான் 1921-ம் வருஷத்திலிருந்து,—மகாத்மா காந்தியின் தலைமை இந்த தேசத்தில் ஏற்பட்டதிலிருந்து,—மதுவிலக்கு காங்கிரஸ் திட்டத்தில் முதன்மையாக இருந்து வந்திருக்கிறது.

மதுவிலக்குத் திட்டத்தைப் போல் பொது மக்களின் ஒருமுகமான ஆதரவைப் பெற்ற காங்கிரஸ் திட்டம் வேறு எதுவுமே இல்லையென்று சொல்லலாம்.

எனவே, மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டு, கள்ளுக் கடைகளை மூடும் அதிகாரம் கைக்கு வந்ததும் அந்தக் காரியத்தைச் செய்வது சர்வ நியாயமான, சர்வ முக்கியமான, சர்வோத்தமமான காரியம்.

மாகாண முழுவதிலும் மதுவிலக்குச் செய்திருக்க வேண்டும். உடனே அவ்வளவு செய்ய முடியவில்லையென்பதற்காக எட்டு ஜில்லாக்களில் மட்டும் செய்திருக்கிறார்கள்.

முதலில் நாலு ஜில்லாக்களில் மதுவிலக்குச் செய்ய உத்தேசித்திருந்தார்கள். அது போதாது என்று பலமான பொது ஜனக் கிளர்ச்சி செய்ததின் பேரில் எட்டு ஜில்லாக்களில் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பொது ஜன அபிப்பிராயத்துக்குத் தலை வணங்கிய காங்கிரஸ் மந்திரிகளுக்கு நாமும் ஒட்டிக்கு இரட்டி வந்தனத்தைச் சமர்ப்பிக்கிறோம்.

எட்டு ஜில்லாக்களிலும் பதின்மூன்று மந்திரிகள் சென்று மதுவிலக்குச் சட்ட அமுலை ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள்.

இது சரியான காரியம்.

ஏனெனில், மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்ததால் மட்டும் காரியம் நிறைவேறியதாகி விடாது.

சட்டத்தைத் தக்க முறையில் திறமையாக அமுல் நடத்த வேண்டும்.

"திருட்டுக் கள் குடிக்கிறார்கள்; கள்ளச் சாராயம் இறக்குகிறார்கள்; ஆகையால் மதுவிலக்குச் சட்டத்தால் பயனில்லை!" என்று அட்வைஸரி சர்க்கார் பாடிய பல்லவியை மீண்டும் கேட்பதற்குப் பொது ஜனங்கள் விரும்ப மாட்டார்கள்.

திருட்டுக் கள்ளும் கள்ளச் சாராயமும் உற்பத்தியாகின்றன என்றால், முதலில் அந்த ஜில்லாக்களின் உத்தியோகஸ்தர்கள் திறமை யற்றவர்கள் என்று நிரூபணமாகும். அடுத்தபடி, காங்கிரஸ் மந்திரிகள் திறமையற்றவர்கள் என்றும் ஏற்படும்.

ஆனால் மதுவிலக்குச் சட்டம் பயனற்றது என்று மட்டும் ஒரு நாளும் ஏற்படாது.

எனவே, மதுவிலக்கை அமுல் நடத்துவதில் காங்கிரஸ் மந்திரிகள் கண்ணுங் கருத்துமா யிருக்க வேண்டும். அடுத்த ஏப்ரல் மாதத்தில் மாகாணம் முழுவதிலும் மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு இப்போதிருந்தே முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

* * *

அக்டோபரில் காங்கிரஸ் மந்திரிகள் அமுலுக்குக் கொண்டு வரும் மற்றொரு திட்டம், கதர்த் திட்டமும் கிராம நிர்மாணத் திட்டமுமாகும்.

'தனக்காகவும் தெரியாது, சொன்னாலும் கேட்பதில்லை' என்ற பிடிவாத குணம் உள்ளவர்கள் சிலர் அரசியல் உலகத்தில் உண்டு.

பிரதம மந்திரி பிரகாசம் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவரல்ல என்பதை அறிந்து மகிழ்ச்சி யடைகிறோம்.

பிறர் சொல்லுவதற்குச் செவி சாய்க்கும் ஸ்ரீ பிரகாசம் அவர்களின் நல்ல இயல்பு மதுவிலக்குத் திட்டத்தில் வெளியாயிற்று. கதர்த் திட்டத்தில் இன்னும் நன்றாக வெளியாகிறது.

சட்டசபையின் பட்ஜெட் கூட்டத்துக்கு முன்னால் காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடந்தபோது, ஸ்ரீ பிரகாசம் தமது கதர்த் திட்டத்தைக் கொண்டு

வந்தார். அது 24 ஜில்லாக்களிலும் 24 பிர்க்காக்களில் கட்டாய நூல் நூற்பு, கட்டாயக் கதர் நெசவு, கட்டாயக் கதர் அணிவு ஆகியவற்றைக் கொண்ட திட்டம். இதைப் பற்றி மதுரை ஏ. வைத்தியநாதய்யர் "இது மிகவும் முக்கியமான விஷயம். அவசரப் பட்டுக் காரியத்தைச் செய்து கதருக் கெட்ட பெயர் வாங்கித் தரக் கூடாது. மகாத்மாவையும் ராட்டைச் சங்கத்தையும் கலந்து திட்டம் போடுங்கள்!" என்று சொன்னார். இதைக்கேட்ட பிரதம மந்திரி "என்னை அவமானப்படுத்தவல்லவா இப்படிச் சொல்கிறீர்? நான் என் ஒருவருடைய யோசனையைப் போய்க் கேட்க வேண்டும்?" என்று சீறினார்.

ஆனால் அப்புறம் யோசித்துப் பார்த்ததில் அவருக்கே ஸ்ரீ வைத்தியநாதய்யர் சொல்வது சரிதான் என்று பட்டது. மகாத்மா காந்தியையும், வர்தாவிலுள்ள கதர்த் தலைவர்களையும் கலந்து கொண்டுவர டெக்ஸ்டைல் கமிஷனர் ஸ்ரீ வெங்கடேசுவரரை அனுப்பினார்.

அப்படி அனுப்பியது ரொம்ப நல்லதாய்ப் போயிற்று.

அதன் பயனாக ஒரே மூச்சில் 24 ஜில்லாக்களிலும் கதர்த் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வராமல் ஏழு ஜில்லாக்களில் மட்டும் சோதனை செய்து பார்க்கப் போகிறார்கள்.

அசல் திட்டத்திலிருந்த கட்டாயப் படுத்தும் அம்சம் புதிய திட்டத்தில் இல்லையென்று அறிகிறோம்.

பொது ஜனங்களின் அன்பையும் அபிமானத்தையுமே ஆதாரமாகக் கொண்டு வளரவேண்டிய திட்டம் ஒன்று உண்டென்றால், அது கதர்த் திட்டம்தான்.

துணிக்கு அசாத்திய கிராக்கி ஏற்பட்டிருக்கும் இந்தக் காலத்திலே கூடக் கதர் உற்பத்தி அவ்வளவு பிரமாதமாகப் பெருகி விடவில்லையென்றால், அதிலிருந்து தெரிய வருவது என்ன? கதர்த் திட்டத்தில் பல சிரமங்கள் இருக்கின்றன என்பதுதான். அப்படிப்பட்ட காரியத்தைக் கட்டாயமாக ஜனங்களின்மேல் சுமத்துவது,— வர்ஜா வர்ஜமின்றிச் சிறுவர் சிறுமியர் முதல் கிழவர் கிழவிகள் வரையில் சுமத்துவது என்றால்,— கதர் மீது ஜனங்கள் வெறுப்புக் கொள்வதற்கே அது காரணமாகிவிடும்.

ஏழு பிர்க்காக்களில் மட்டும் அமுலுக்கு வரும் புதிய கதர்த் திட்டத்தில் மேற்படி கட்டாய அம்சம் நீக்கப்பட்டிருப்பது பற்றி மிகவும் மகிழ்கிறோம்.

அது போலவே அசல் திட்டத்தில் கண்டிருந்த அபார செலவினங்களும் புதிய திட்டத்தில் குறைக்கப்பட்டிருக்குமென்று நம்புகிறோம்.

அசல் திட்டத்தின் முதல் வருஷம் ஒரு லட்சம் இராட்டைகள் செய்வதற்கு 8,50,000 ரூபாயும், இரண்டாவது வருஷத்துக்கு 32,46,750 ரூபாயும் செலவு மதிப்புப் போட்டிருந்தார்கள்.

மேற்படி திட்டத்தை நடத்தி வைப்பதற்கான நிர்வாக உத்தியோகஸ்தர்களின் சம்பளம், படி ஆகியவற்றுக்கு 6,59,000 ரூபாய் முதல் வருஷத்தில் செலவுத் திட்டம் போட்டிருந்தார்கள்.

இந்தப் பெரிய தொகைகளில் பெரும் பகுதி தண்டச் செலவு என்றும், உத்தேசித்த காரியத்துக்குப் பயன்படுவதற்குப் பதிலாக நடுவிலுள்ள ஏஜண்டு முதலாளிகள், வியாபாரிகள் ஆகியவற்றின் வயிற்றுக்குள்ளே போய் விடுமென்றும் பயப்படுவதற்குக் காரணம் இருந்தது.

இதையெல்லாம் நன்கு அறிந்த கதர் அன்பரான ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர் "மகாத்மாவிடம் கேளுங்கள்!" என்று யோசனை சொன்னார்.

அவர் யோசனை சொன்னது நல்லதாகப் போயிற்று. கதர் இயக்கம் தப்பிப் பிழைத்தது!

காந்தி மகாத்மாவினாலும், வர்தா கதர் நிபுணர்களினாலும் சீர்திருத்தப்பட்ட மேற்படி கதர்த் திட்டம் ஏழு பிர்க்காக்களில் மட்டும் முதலில் அமுலுக்கு வருகிறது.

இந்த ஏழு பிர்க்காக்களிலும் கிடைக்கும் அனுபவத்தைக் கொண்டு மற்ற இடங்களிலேயும் அந்தத் திட்டத்தைத் தக்க முறையில் அமுலுக்குக் கொண்டு வருவது யுக்தமாயிருக்கும்.

சென்னைக் காங்கிரஸ் மந்திரிகள் கொண்டு வந்திருக்கும் காந்தி மகானுக்கு உகந்த அக்டோபர் திட்டங்கள் இரண்டும் நல்ல முறையில் நடந்து சிறந்த வெற்றியடைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

அந்த வெற்றியானது காங்கிரஸ் மந்திரி சபையின் மற்றக் காரியங்களிலேயுள்ள குறைபாடுகளைக் கூடப் பொது ஜனங்கள் மறக்கும்படி செய்து காங்கிரஸ் மந்திரிகளுக்குப் பெயரையும் புகழையும் பொது ஜன ஆதரவையும் அபாரமாகத் தேடிக் கொடுக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

தலைப்பாகை போயிற்று!

இம் மாதம் பத்தாம் தேதி நூற்றுக் கணக்கான சர்க்கார் காரியாலயங்களில் மௌனம் குடிகொண்டிருந்திருக்கும். ஆயிரக்கணக்கான பேனாக்களுக்கு ஓய்வு கிடைத்திருக்கும். பதினாயிரக்கணக்கான நாற்காலிகள் காலியாகக் கிடந்திருக்கும். எத்தனை எத்தனையோ டைப்ரைட்டர்கள் நிசப்தமாகத் தூங்கி யிருந்திருக்கும். இம் மாகாணத்தின் அரசாங்க நிர்வாகமே ஸ்தம்பித்து நின்றிருக்கும். பிரதம மந்திரி பிரகாசமும் அவரைச் சேர்ந்த பாக்கிப் பன்னிரண்டு மந்திரிகளும், பார்லிமெண்டரி காரியதரிசிகளும், ஒரு சில உயர்தர அதிகாரிகளும் சர்க்கார் காரியாலயங்களில் உட்கார்ந்து ஈ ஓட்டும்படியாக ஏற்பட்டிருக்கும்.

நல்ல வேளையாக அப்படி ஒன்றும் நேர்ந்து விடவில்லை. தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையோடு போயிற்று. அதாவது சென்னை சர்க்காரின் மதிப்பு ஒரு சிறிது பறிபோனதுடன் நின்றது.

அக்டோபர் 10உ வேலை நிறுத்தம் தொடங்குவதாகச் சொன்ன அஸ்திவார உத்தியோகஸ்தர்கள், தங்கள் வேலை நிறுத்த நோட்டீஸை வாபஸ் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பிரதம மந்திரி பிரகாசம் மேற்படி உத்யோகஸ்தர்களின் குறைகளைத் தீர்த்து வைப்பதாக வாக்களித்ததன் பேரில் அஸ்திவார உத்தியோகஸ்தர்கள் வேலை நிறுத்த யோசனையைக் கைவிட்டிருக்கிறார்கள்.

அஸ்திவார உத்யோகஸ்தர்கள் அன்றும் இன்றும் கோருகிற கோரிக்கை என்னவென்றால், வாழ்க்கைச் செலவு அபரிமிதமாகப் பெருகி யிருப்பதால், கொஞ்சம் சம்பள உயர்வு கொடுக்க வேண்டும் என்பதே யாகும்.

தற்போதைய கால நிலைமையில் இந்தக் கோரிக்கை எவ்வளவு நியாயமானது என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. சர்க்கார் நடப்பதற்கே அஸ்திவாரமாக இருந்து வரும் ஏழை உத்யோகஸ்தர்களின் சம்பள விஷயத்தில் மந்திரிகள் தங்கள் சொந்த சம்பள விஷயத்தில் காட்டியதில் பத்தில் ஒரு மடங்கு சிரத்தையையாவது காட்டி யிருந்தால் போதும்.

அப்படிக் காட்டவில்லை. மேற்படி உத்யோகஸ்தர்களின் விண்ணப்பத்தை வாங்கிக் குப்பைத் தொட்டியிலே போட்டு வந்தார்கள். கடைசி நிமிஷத்தில் ஒருவாறு விழித்தெழுந்து, கண்ணைத் துடைக்கும் பரிகாரமாக மூன்று ரூபாயும் நாலு ரூபாயும் சம்பள உயர்வு கொடுப்பதாகச் சொன்னார்கள்.

மேற்படி அவமானத்தைக் கூட அந்த அப்பாவி உத்தியோகஸ்தர்கள் ஏற்றுக் கொண்டு பேசாமல் 'கம்'மென்று இருந்திருப்பார்கள். ஆனால், சர்க்காரோ அதற்குமேலே ஒரு படி சென்றார்கள். அதாவது, மேற்படி உத்தியோகஸ்தர்கள் சங்கத்துக்குக் கொடுத்திருந்த அங்கீகாரத்தை ஏன் பிடுங்கக் கூடாது என்று காரணம் கேட்டார்கள். மேற்படி சங்கத்தின் அக்கிராசனர், உப அக்கிராசனர், காரியதரிசி இவர்களை உத்தியோக விதிகளுக்கு மாறாக நடந்ததற்காக ஏன் வேலையைவிட்டு நீக்கக்கூடாது என்று காரணம் கேட்டார்கள். இதெல்லாம் வெந்த புண்ணிலே வேல் விடுவதுபோலாயிற்று. அஸ்திவார உத்தியோகஸ்தர்களுக்கு மனக் கொதிப்பு உண்டாயிற்று. கடைசியில் தீர ஆலோசித்துப் பார்த்த பிறகு, இந்தச் சர்க்காரிடம் கெஞ்சிப் பார்த்து ஒன்றையும் வாங்க முடியாது. போராடியே வாங்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள். அக்டோபர் மாதம் பத்தாம் தேதி நாற்காலியைக் காலி செய்வது, பேனாவைக் கீழே வைத்து விடுவது என்று தீர்மானித்தார்கள்.

நல்ல வேளையாகப் பிரதம மந்திரி பிரகாசம் கடைசி நிமிஷத்தில் தூக்கத்திலிருந்து திடீரென்று விழித்தெழுந்து "உத்தியோகஸ்தர்களின் சம்பள விகிதம் மகா கேவலம்" என்று தெரிந்து கொண்டார். தெரிந்துகொண்டு, அவர்களுடைய குறைகளை அனுதாபத்துடன் கவனிப்பதாகவும் வாக்களித்தார். அதிகார ஜபர்தஸ்து நோட்டீஸ்களையெல்லாம் வாபஸ் வாங்கிக் கொள்வதாகவும் சொன்னார். அதன் பேரில் உத்தியோகஸ்தர்களும் வேலை நிறுத்த நோட்டீஸை வாபஸ் வாங்கிக் கொண்டார்கள்.

கனம் பிரகாசம் அனுதாபத்துடன் கவனிக்கும்போது ஒரே ஒரு முடிவுக்குத் தான் வரும்படி யிருக்கும். அதாவது உத்தியோகஸ்தர்களின் கோரிக்கையை ஒப்புக்கொண்டே தீரவேண்டி யிருக்கும். ஏனெனில் உத்தியோகஸ்தர்கள் கேட்பதெல்லாம் மாதம் எட்டு ரூபாயும் நாலு அணாவுந்தான்! இது இந்திய சர்க்கார் தங்கள் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்திருக்கும் இடைக்கால நிவாரணம். இதை இந்திய சர்க்காரைப் போல் சென்ற வருஷத்திலிருந்தே கணக்குப் பார்த்துக் கொடுக்க வேணுமென்று இம் மாகாண உத்தியோகஸ்தர்களும் கேட்கிறார்கள். மேற்படி அற்பத் தொகை விஷயத்தில் சென்னை சர்க்கார் கருமித்தனம் காட்ட வேண்டியதில்லை. தயங்காமல் கொடுத்து விட்டு இனிமேலாவது நல்ல பெயர் வாங்கிக் கொள்ளலாம்.

வான சஞ்சாரம்

இசைத் தேனீ

ரேடியோவில் முழு நேரம் பெரிய கச்சேரிகளுக்குக் கொடுக்கும் ஒன்றே கால் மணிகூட, ஒரு பெரிய வித்வான் தம் கலையின் முழுத் திறமையையும் அழகையும் வெளிக் காட்டுவதற்குப் போதாது. அக் குறுகிய நேரத்தில் இரண்டு நிபுணர்களைச் சேர்த்துக் கச்சேரி செய்ய ஏற்பாடு செய்து விட்டால் கேட்க வேண்டியதில்லை.

செப்டம்பர் 24ல் திருச்சியில் திருவாடுதுறை ராஜரத்னம், திருவெண்காடு சுப்ரமணியம் ஆகிய இரண்டு பிரபல நாதஸ்வர வித்வான்கள் சேர்ந்து வாசித்தார்கள். குழல் நாதத்தை அடக்கி மெல்லியதாய் வாசிப்பதில் மாத்திரந்தான் இருவருக்கும்' ஒற்றுமையே தவிர, பாணியிலும் கற்பனையிலும் குறிப்பிடத் தக்க 'வித்யாச முண்டு என்று தெரிந்தது. பல்லவி ராகமாம் வாசஸ்பதி ஆலாபனையில், இருவரும் மாற்றி மாற்றித் தனித் தனியாய் வாசித்தது நல்ல அம்சமா யிருந்தது. 'உபசாரமு' கிருதியைச் சேர்ந்து வாசித்ததில் பல இடங்களில் போதிய சேர்க்கை யில்லை. இரண்டு நிபுணர்கள் சேர்ந்த இடத்தில் போட்டா போட்டி மனப்பான்மையினுலான பாண வேடிக்கைகளே அதிகமா யிருக்கும் என்பது கல்யாணி உருப்படியிலும் ஸ்வரப் ரஸ்தாரங்களிலும் ருஜுவாகியது.

26ல் திருச்சியில் நடந்த மதுரை மணி அய்யரின் கச்சேரி முதல்தரமா யிருந்தது. சரஸ்வதி, பூர்விகல்யாணி, சங்கராபரண ராகங்கள் வெகு நன்று யிருந்தன. ஆயின் அவருக்கு இயல்பான அதிகக் கத்தரிப்புக்கு உள்ளாகியது. எல்லா உருப்படிகளுக்கும் ஸ்வரம் பாடினுர் என்பது சொல்லத் தேவையில்லை.

இயற்கை சாரீர சம்பத்துக் குறைவாயினும், அபூர்வ கமக சாதகத்தினுல் அழகு படப் பாடலாம் என்பதற்கு 28ல் சென்னையில் நடந்த பக்கமடை சுந்தரமய்யரின் கச்சேரியே சாக்ஷி. அன்று அவர் கையாண்ட இரண்டு ராகங்களில் கன்னட என்பது சங்கராபரண ஜன்யம். ஸரிகமபதநிஸ — ஸநிதபமப கமரிஸ என்னும் ஆரோஹண அவரோஹணத்தைக் கவனித்தால் அது எவ்வளவு வக்ரமான ராகம் என்பது தெரியவரும். அந்த ராகத்தின் ஸ்வரூபம் ஸ்படிகம் போல் தெளிவாயிலங்கும்படி வெகு சரளமாய்ப் பாடினுர்.

வேணுகானத்தைக் கையாளும் பெண்மணிகளில் டி. ஆர். நவநீதம் சிறந்த திறமை வாய்ந்தவர். சுருதி சுத்தமும் நாதப் பொழிவும் வடுப்படாத ராகங்களின் வளப்பும் அவரது கலையின் விசேஷ அம்சங்கள். பல்லவி ராகமாம் கல்யாணியும் ஆனந்த பைரவியும் கவனத்தைக் கவர்ந்தன.

* * *


திருச்சியில் 25ல் பாடிய டி. என். சேஷாத்ரிக்குச் சற்று கன சாரீரம் போலும். ஞானச் சிறப்பும் நல்வழியும் கொண்டவர். பல ராகங்களை அனுயாசமாகக் கையாண்டார். சுத்த சாவேரிக்கு முதல் ஸ்தானம் கொடுக்கலாம். உருப்படிகளும் ஸ்வரப்ரஸ்தாரங்களும் விறுவிறுப்பா யிருந்தன.

27ல் திருச்சியில் டி. எம். ஷண்முக சுந்தரம் நய சாரீரத்தில், நல்வழியும், மிக்காரப் பொழிவும் கொண்டு வழங்கிய கௌரீமனோஹரி, ஆந்தோளிகா, ஆபோகி ராகங்களும் உருப்படிகளும் தேர்ந்தியா யிருந்தன.

அன்று சென்னையில் டி. என். விஜயலக்ஷ்மி இனிய குரலில் வெகு தைர்யமாய் ராகங்களையும் உருப்படிகளையும் விட்டுப் பாடினுர். நாட்டக்குறிஞ்சி சிறப்பா யிருந்தது.

28ல் சென்னையில் எஸ். விசுவநாதன், வி. பி. ராதா, ஆர். ஜயலக்ஷ்மி இவர்களின் கச்சேரிகள் தரமா யிருந்தன. முதலாவது ஸிம்ஹவாஹினி ராகமும், மாரரஞ்சனி கிருதியும் கவனத்தை யிழுத்தன. பின் இரு பெண்மணிகள் சேர்ந்து பாடியதில் உதயரவி சந்திரிகா ராகமும், மாற்றி மாற்றி ஸ்வரம் பாடியதும் தேர்ந்தியா யிருந்தன.

30ல் சென்னையில் மணக்கால் வரதராஜன், பழனி ஆர். பாகீரதி இவர்களின் கானங்கள் நன்று யிருந்தன. முன்னவர் பைரவி ராகத்திலும், ஹரிகாம்போதி உருப்படியிலும் தன் திறமையை நன்கு வெளிப்படுத்தினுர். பின்னவரது சங்கராபரணம் சுகமா யிருந்தது.



கம்பர் தரும் காட்சி

155. மனமே, உனக்கேன் வருத்தம்?

★ ★ ★

அங்கஹீனமாய் அவமானமே உருக் கொண்ட மாதிரி சூர்ப்பனகை ஓடி வந்து ராவணன் பாதத்தில் 'ஓ' என்று அலறி விழுந்தாள். "யாருடைய செயல் இது?" என்று ராவணன் கேட்டான். கேட்ட கேள்விக்குப் பதிலாக, "ராமலக்ஷ்மணர்கள் ஆகிய மனிதர்கள்தான் இப்படிச் செய்தார்கள்" என்று சொன்னதுடன் அவள் நிற்கவில்லை. வெகு அழகு வாய்ந்தவர்கள், வீரர்கள், உயர்ந்த பண்புடையவர்கள் என்றெல்லாம் பாராட்டியும், வியந்தும் பேசினாள்!

இதைக் கேட்ட ராவணனுக்கு எப்படி இருக்கும்? இதயம் இடிகிறது; மனம் கசந்து போகிறது.

இந்தக் கசந்த நிலையிலே தன் வயிற்றெரிச்சலைக் கொட்டுகிறான். "இந்தப் பெரிய சாம்ராஜ்யத்தை ஏதோ ஏமாற்றம் செய்தா ஆக்கிக் கொண்டேன்! அல்லவே! வீரச் செயல்கள் ஒவ்வொன்றாய்ச் செய்து செய்து, என்னுடைய சக்தியினாலேயே கைக்கொண்டேன். அப்படி எல்லாம் கைக்கொண்டதின் பயன் இந்த அவமானம்தானா? என்னுடைய கீர்த்தி எல்லாம் இன்றோடு தொலைந்தது. உலகத்திலுள்ள சிறந்த வீரர்களது முடிகளெல்லாம் என்னால் அற்று விழுந்தது என்றாலும், இப்போது தொலைந்து போன கீர்த்தி மறுபடியும் வந்து சேரும் என்பது உண்டா?" என்று பொருமுகிறான்.

> கொற்றம் அது முற்றி வலி-
> யால் அரசு கொண்டேன்;
>
> உற்ற பயன் மற்று இதுகொல்,
> ஓங்கு இசை இழந்தேன்;
>
> முற்ற உலகத்து முதல்
> வீரர் முடி எல்லாம்
>
> அற்ற பொழுதத்தும், அது
> வந்து உறுதல் ஆமோ?

[கொற்றம் அது முற்றி: வீரச் செயல்கள் புரிந்து வீரம் வளர்த்து: வலியால் அரசு கொண்டேன்: சக்தியினாலேயே சாம்ராஜ்யத்தைப் படைத்துக் கொண்டேன்: உற்ற பயன் மற்று இதுகொல்: அப்படியெல்லாம் படைத்ததன் பயனா இந்த அவமானம்; ஓங்கு இசை, இழந்தேன்: வானுலகம் வரை எட்டிய என்னுடைய கீர்த்தியை இதோ இழந்து விட்டேனே; முற்ற உலகத்து உலகம் முழுவதிலும் உள்ள; முதல் வீரர்: தலையான வீரர்களது; முடி எல்லாம் அற்ற பொழுதத்தும்: என்னுடைய வீரச் செயலாலேயே அற்று ஒழிந்தன என்று ஏற்பட்ட பொழுதும்: அது வந்து உறுதல் ஆமோ: இழந்த கீர்த்தி இருக்கிறதே, அது என்னை மீண்டும் வந்து சேருமா?

குறிப்பு:—மனங் கசந்த பாவத்தைச் செய்யுளின் உருவத்திலே நன்றாய்ப் பார்க்கலாம்.]

ராவணனுக்கு இன்னும் அதிகமாகக் கோபம் வருகிறது; அலறுகிறான்.

"ஊழிக் காலம் வரையும் நிற்பதான பழியை எனக்கு அளித்துள்ளவர்கள் முழு ஆளாகவே இருக்கிறார்கள். அவர்களுடைய உயிர் இன்னும் இருக்கிறது என்று சொல்லும்படி நாளும் ஒன்று, இரண்டு, மூன்று என்று கழிகின்றன. அதெல்லாம் போக ஆலகால விஷத்தையே உண்ட சிவபெருமானது வாள் வேறு இருக்கிறது. நானும்தான் இருக்கிறேன். ஆனால் இதனாலெல்லாம் என்ன பிரயோஜனம்?" என்கிறான்.

> ஊழும் உள; தாய பழி
> என்வயின் உறுத்தார்
>
> ஆளும் உள; அன்னவர்தம்
> ஆர் உயிரும் உண்டாம்;
>
> நாளும் உள; காலவிடம்
> உண்ட இறை நல்கு
>
> வாளும் உள, தோளும் உள,
> நானும் உளென் மன்னோ!

[பழி என்வயின் உறுத்தார்: எனக்குப் பழியைச் செய்தவர்கள்: ஆளும் உள:

ஆனால் இன்னும் இருக்கிறீர்கள்: வானும் உன் தோளும் உன்; வான் இருக்கிறது, அதை உபயோகிக்கத் தோளும் இருக்கிறது; நானும் உடனே மன்றோ: நானும் இருக்கிறேன், நன்றாகவே இருக்கிறேன்: இடையிடக் கேவலமான காரியம் உண்டோ?

குறிப்பு:—மனம் புழுங்கி வெதும்புகிற பாவம் கவியில் வெகு அற்புதமாய் அமைந்திருக்கிறது. செய்யுளைத் திரும்பத் திரும்பப் பாட வேண்டும். பாடினால் பாவம் துலாம்பரமாவதைக் காணலாம்.]

மனம் இன்னும் புழுங்குகிறது; அவமானமும் கோபமும் சேர்ந்து ஒருவிதமான பைத்தியத்தையே உள்ளத்தில் உண்டாக்கி விடுகிறது.

"மனமே! இதுவரை இல்லாத புதிதான உறவு ஒன்று உனக்கு வந்திருக்கிறது. இப்போது வந்திருக்கிறதே, இந்தப் பழிதான் அந்த உறவு. அதற்காக லஜ்ஜைப் பட்டுச் சஞ்சலப்பட வேண்டாம்; தளர்ச்சியடைய வேண்டாம். துயரப்படக் காரணமே இல்லை!" என்ற மனக் கசப்பில் வருகிறது பாடல்.

புத்து ற(வு)உ றப்ப ழி
புகுந்த தென நாணித்
தந்து றவ(து) என்னே, மன—
னே! தளரல், அம்மா!
எந்து யர்உ னக்கு ள(து)!
இனிப்ப ழிசு மக்கப்
பத்து ளத லைப்ப குதி,
தோள்கள் பல அன்றே!

[புத்துறவு உறப் பழி புகுந்தது என: இதுவரை இல்லாத புதிய உறவு வீட்டுக்குள் புகுந்த மாதிரி, பழி புகுந்தது என்று—கோபாவேசத்தில் பிறந்த ஒரு எண்ணம்; நாணித் தந்துறவது என்னே மனனே: அவமானப் பட்டுச் சஞ்சலமடைவதேன் மனமே; தளரல் அம்மா: தளர வேண்டாம்; எந்துயர் உனக்கு உளது: என்ன துயரம் உனக்கு இருக்கப் போகிறது. இனிமேல் இந்தப் பழியோ இதற்கு மேலான பழியோ வந்தால் வாங்குவதற்கு; பத்துள தலைப் பகுதி: தலைகளாகிய உறுப்புக்கள் ஒன்றிரண்டா, பத்து இருக்கின்றன; தோள்கள் பல அன்றே: தோள்களும் ஒட்டிக்கு இரட்டிப்பாய் இருபது இருக்கின்றன.]

சாம்ராஜ்ய வெறி பிடித்து நின்ற மனசுக்கு அவமான உணர்ச்சி வந்து விட்டது. மனக் கசப்பு உச்சத்துக்கு ஏறிவிட்டது. அது இறங்குவதற்கு வழியே இல்லை போல் அரக்கனுக்குத் தோன்றுகிறது. நமக்குமே தோன்றுகிறது. இனி என்ன நிகழும்; பார்க்கலாம்.

அட்டைப்பட விளக்கம்

வெள்ளி விழா வைபவம்

"இந்த பூமியில் எதற்காகப் பிறந்தோம்? அதிலும் பள்ளிக்கூட உபாத்தியாயர்களாக ஏன் ஆனோம்?" என்று ஆசிரியர்கள் பெரும்பாலோர் நாடெங்கும் குறைப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில், ஓர் ஆசிரியர் "மறுபடியும் மறுபடியும் நான் இந்த பூமியில் பிறந்து உபாத்தியாயர் தொழில் செய்ய விரும்புகிறேன். இப்போது நான் வாங்கும் சம்பளத்தைக் காட்டிலும் இரண்டு பங்கு கொடுத்து அழைத்தாலும் வேறு உத்தியோகத்துக்குப் போகமாட்டேன்!" என்று சொன்னால், அது எத்தனையோ அதிசயமான சம்பவமல்லவா? அம்மாதிரி சென்ற செப்டம்பர் 29உ ஓர் ஆசிரியர் சொன்னார். புரசவாக்கத்திலுள்ள ஸர் எம். சி. டி. முத்தையா செட்டியார் ஹைஸ்கூலின் தலைமை ஆசிரியர் ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர் தான் அவர். நமது அட்டைப் படத்தில் விளங்குவோரில் இடதுபுறம் நிற்பவர்.



ஸ்ரீ கோபாலகிருஷ்ணையர் மேற்படி பள்ளிக்கூடத்தில் தொண்டு செய்ய ஆரம்பித்து இருபத்தைந்து வருஷம் ஆனதை முன்னிட்டுச் சென்ற ஞாயிற்றுக்கிழமை வெள்ளி விழாக் கொண்டாடினார்கள். மற்ற உபாத்தியாயர்கள், மாணாக்கர்கள், புரசவாக்கம் பிரமுகர்கள், பள்ளிக்கூட நிர்வாகக் கமிட்டியார் எல்லாரும் உற்சாகமாக ஒத்துழைத்து மேற்படி விழாவை நடத்தினார்கள். ஹெட்மாஸ்டர் கோபாலகிருஷ்ணையரின் கழுத்தில் மாலைக்கு மேல் மாலையாக விழுந்தன. கையில் உபசார பத்திரத்துக்கு மேல் உபசார பத்திரமாக வந்து குவிந்தன. வெள்ளிக் கூஜா, வெள்ளித் தட்டுகள் பரிசு அளிக்கப்பட்டன. பலர் சொல்மாரி பொழிந்து, ஹெட்மாஸ்டர் புது மாப்பிள்ளையைப்போல் நாணமடையும்படியாகப் புகழ்ந்து தள்ளிவிட்டார்கள்!

இத்தனை புகழுக்கும் இதற்கு மேலும்கூட உரிமையுள்ளவர் ஸ்ரீ கோபாலகிருஷ்ணையர். கல்வி கேள்வியிலும் விருப்பம்தரும் ஒழுக்கத்திலும் அவர் உயர்ந்தவர். உபாத்தியாயர்களும், மாணாக்கர்களும், மாணாக்கர்களின் பெற்றோர்களும் மகிழ்ந்து பாராட்டும்படியாக ஹெட்

கலை நகரிலே!

சப்புரு

மகோன்னதமான மத்திய சர்க்காரிலே, மாட்சிமை பொருந்திய மாபெருந் தலைவர்கள் ஆட்சி செலுத்தும் அழகைப் பற்றி அறியத் தமிழ் மக்கள் அனைவரும் ஆவலாய் விரும்புவது இயல்புதான். ஆதலால் ''தலைநகரில்'' என்ற தலைப்பின் கீழ் சில தகவல்களைத் தெரிவிக்க உத்தேசித்துள்ளேன்.

அற்புதம்!

'சிவப்பு நாடா'வில் ஊறிப்போய் இருக்கும் இலாக்காக்களை ஒழுங்கு படுத்துவதில் மந்திரிகள் முனைந்திருக்கிறார்கள். ஒன்பதேகாலுக்கே காரியாலயத்திற்கு வந்து மாலை ஆறு மணி வரை நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த அவர்கள் வேலை செய்வது டெல்லியையே திகைக்க வைத்திருக்கிறது. ஸர் ஷாபத்தைக் குத்தியும் ராஜாஜியைச் சுட முயன்றும், ஜவாஹரைக் கொல்ல யத்தனித்தும்(?) கூட இந்த முடிசூடா மன்னர்கள் பயமின்றிக் கை வீசிக்கொண்டு உலாவுவது அற்புதத்திலும் அற்புதம். ஈசுவர சித்தம் என்று ஒன்றிருக்கிற தென்றால் அது ராஜாஜியைச் சுட முயன்ற சம்பவமென்றே சொல்லிவிடலாம். வண்டியை விட்டுக் கீழ் இறங்கி வீடு சென்றபின் சுடப்படவே வண்டிக்குத்தான் காய மேற்பட்டது. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னும் ஒரு செந்தலையின் துணையுமின்றி அவர் மாலை நடக்கும் மந்திராலோசனை சபைக்கு வருவதைப் பார்க்கும்போது, "இவரையா பதவி மோகக்காரர் என்று நம்மவர்கள் சொன்னார்கள்!" என்று நமக்கு வியப்புண்டாகிறது. இவருக்கு உயிரிலேயே மோகம் இல்லாமல் இருக்கையில் பதவியில் என்ன மோகம் இருக்கப் போகிறது?

பிடி சாபம்!

சென்னையில் கன்னங்ஹேம் துரையைக் கரை கடத்திய கறுப்புக்கண்ணாடிக்காரர் டெல்லியிலும் சும்மா இருக்கவில்லை யென்று தெரிய வருகிறது. நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் இலாக்காவில் பெரிய ஊழல் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறாரென்றும், அதில் பல பெரிய பேர்வழிகள் ஈடுபட்டிருக்கிறார்களென்றும் பேச்சு உலாவுகிறது. ராஜாஜி என்றாலே மோசடிக்காரர்களுக்குச் சிம்ம சொப்பனமல்லவா? அவர் வருகிறார் என்று கேள்விப்பட்டவுடனேயே பல வெள்ளை துரைகள் ரஜா எடுத்துக் கொண்டு விட்டார்கள். வந்ததும் வராததுமாய் நூற்றுக்கு மேற்பட்ட பல பொருள்களின் இறக்குமதித் தடையை எடுத்து விட்டார். கூடிய சீக்கிரம் மகத்தான மாறுதல்களும் முன்னேற்றங்களும் ஏற்படுமென்று விஷயம் அறிந்த வட்டாரங்களில் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்படியும் உண்டா?

சர்க்கார் இலாக்காக்கள் எவ்வளவு திவ்யமாய் நடந்து வந்திருக்கின்றன என்பதைக் குறித்து உள்ளூர் உருது தினசரி ஒன்று ஒரு ரசமான சம்பவத்தை வெளியிட்டிருக்கிறது.

நமது மந்திரி ஒருவர், தம் இலாக்காவின் பிரதம காரியதரிசியைக் கூப்பிட்டு,

---

மாஸ்டர் வேலை பார்த்து வருவதுடன், அருமையான வேதாந்த உபந்நியாசங்களின் மூலம் புரசவாக்கம் மகாஜனங்களின் மதிப்பைக் கவர்ந்து 'மகரிஷி' என்ற பட்டமும் பெற்றவர்.

ஹெட்மாஸ்டருக்கு அருகில் கம்பீரமாக நிற்பவர், மேற்படி பள்ளிக்கூடத்தின் நிர்வாகக் கமிட்டித் தலைவரான ஸ்ரீ எம். சி. டி. எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள். தம்முடைய தந்தையின் பெயரைத் தாங்கிய கல்விஸ்தாபனத்துக்கு அவர் பல லட்சம் ரூபாய் நன்கொடை அளித்து, அழகான கட்டிடங்கள் கட்டிக் கொடுத்திருப்பதுடன், பள்ளிக்கூட நிர்வாகத்தில் பணத் தட்டுப்பாடு ஏற்படாவண்ணம் நிரந்தர நிதியும் ஏற்படுத்தியிருக்கிறார். பள்ளிக்கூட நிர்வாகத்தைப் பற்றி ஆசிரியர்கள் புகார் சொல்லி முறையிடாத ஸ்தாபனத்துக்கு உதாரணம் சொல்ல வேண்டுமானால், புரசவாக்கம் ஸர் எம். சி. டி. முத்தையா செட்டியார் ஹைஸ்கூலைத் தயக்கமின்றிக் குறிப்பிடலாம்.

ஆண்டிப்பட்டி ஜமீன்தாரும் கொடை வள்ளலுமான ஸ்ரீ பெத்தாச்சி செட்டியார் அவர்கள் கல்விக்காக அளித்துள்ள நன்கொடைகள் பிரசித்தியானவை. ஸ்ரீ எம். சி. டி. எம். சிதம்பரம் செட்டியார் கல்விக்கு நன்கொடை தரும் விஷயத்தில் தமது சித்தப்பாவைப் பின்பற்றித் தம் தந்தையின் பெயர் சிறந்து விளங்கும்படி செய்து வருவது பெரிதும் பாராட்டத் தக்கது. சென்னை நகரத்தின் பிரபல செல்வர்களில் ஒருவரும் இன்ஷ்யூரன்ஸ் அரசருமான ஸ்ரீ சிதம்பரம் செட்டியார் தமது வாழ்நாளில் இது போன்ற இன்னும் பல நல்ல காரியங்களில் ஈடுபட்டுச் 'செல்வம் பெற்றதன் பெற்ற பயனை' அடைவார் என்று எதிர்பார்க்கிறோம்.



டில்லியமா நகரில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடிய போது பண்டித நேருஜி கொடியேற்று விழா நடத்துகிறார்.

ஒரு பியூனின் சம்பளம் என்னவென்று கேட்டாராம். அவருக்கு அது தெரியாததாலும், தெரிந்துகொள்ள வேண்டிய பிரமேயமே ஏற்படாததாலும், இந்த மாதிரி ஒரு இடைக்கால சர்க்கார் வந்து தம் கழுத்தை யறுக்கும் என்று கனவிலும் கருதாததாலும் பேந்தப் பேந்த முழித்தாராம். ஆகவே, நமது மந்திரி அவருடைய 'டிபுடி'யைக் கூப்பிட்டனுப்பினாராம். அவருடைய 'டிபுடி'யும் “யதா ராஜா......” என்ற நிலையிலிருந்ததால், 'டிபுடி'யின் 'டிபுடி' வரவழைக்கப்பட்டார். அவர், “பஞ்சப்படி சேர்த்துப் பதினெட்டோ இருபதோ கிடைக்கிறது. ஆனால் சம்பளம் சரியாக எவ்வளவு என்று 'சூப்ரண்'டைக் கேட்டு ஒரு நொடியில் வந்து சொல்லுகிறேன்” என்றாராம்.


நமது மந்திரி அவருக்கு அந்தச் சிரமத்தை வைக்க வில்லையாம். “இனி ஏதாவது வேண்டியிருந்தால் நான் 'சூப்ரண்'டையே கேட்டுக் கொள்ளுகிறேன். இலாக்கா விஷயத்தில் நீங்கள் எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று இதிலிருந்து நன்றாய்த் தெரிகிறது!” என்றாராம்.

மேற்படி பத்திரிகை, கதையை இந்த இடத்தில் நிறுத்திவிட்டு மற்றவற்றை நமது ஊகத்துக்கே விட்டுவிடுகிறது. கதை நன்றா யிருக்கிறதல்லவா?

கேட்டுப் பார்க்கவும்

“இசைத்தேவி”யைத்தான் கேட்டுக் கொள்ளுகிறேன். சனிக்கிழமையன்று ஸ்ரீமதி ஏ. என். விசாலாக்ஷி சகோதரிகள் பாடினார்கள். புதுக் கீர்த்தனைகளைப் புது மெருகுடனும், சாகித்யச் சுத்தமாயும் பாடினார்கள். ஸரோஜ நயனா என்ற சக்ரவாகக் கீர்த்தனை எடுத்த எடுப்பிலேயே 'ஜம்'மென்று களை கட்டியது. ஜனனி என்ற பைரவிக் கீர்த்தனை வெகு அழகு. கருணையா என்ற இ[illegible]னக் கீர்த்தனையுடன் கச்சேரி மு[illegible]த்தான் ஞாபகம் வந்தது.

டெல்லியிலிருந்து ஒலி பரப்பப்படும் இந்த நிகழ்ச்சியில் முக்கியமாக ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியின் பாட்டையும், ஸ்ரீமதி விசாலாக்ஷியின் பாட்டையும் கேட்டுப் பார்க்கும்படி மறுபடியும் இசைத்தேவியைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.



டன்லப்
டயருடன்
நம்பிக்கையுடன்
ஓட்டுங்கள்



DK-277-TM

அந்த நாட்கள்

ஸ்ரீராம் குருஸ்வாமி

எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். "வெங்கடராமனைக் கடைத் தெருவில் பார்த்தேன், அம்மா!" என்றான் அண்ணா. கையில் எடுத்த சாதம் அப்படியே நின்றுவிட்டது. பத்து வருஷ ஞாபகம் ஒரு க்ஷண நேரத்தில் 'குபுகுபு' வென்று என் உள்ளத்தில் எழுந்தது.

"வீட்டிற்கு வரச் சொல்லிக் கூப்பிட்டாயா? எப்போது வருகிறேன் என்றான்?" என்று அம்மா கேட்டாள்.

"இப்போது ஒழியாதாம். ஞாயிற்றுக் கிழமை காலையிலேயே வருவதாகச் சொன்னான்!" என்றான் அண்ணா.

சாப்பிட்டுவிட்டு என் அறைக்குப் போனதும் நான் உள்ளே தாளிட்டுக் கொண்டேன். நிலைக்கண்ணாடியின் முன்னால் நின்று கொண்டு யோசித்தேன். ஆறு, ஏழு மாதம் இருக்குமா, அவர் என்னைப் பார்த்து? அப்போது பார்த்த அவர். இப்போது என்னைப் பார்த்தால் அவர் கண்ணில் என்னென்ன வித்தியாசமெல்லாம் படும்? மாறுதல் ஆகுந்தான்; சந்தேகம் இல்லை. ஆனால் ....?

நானோ இந்த ஊரிலேயே அடைந்து கிடக்கிறேன். அவரோ எத்தனையோ பேரைச் சந்தித்திருப்பார்! அப்படிப் பார்த்த கண்கள் மறுபடியும் என்னைப் பார்த்தால்......? முகவெட்டும் பிரகாசமும் களையும் கிடக்கட்டும்; பழகும் தோரணையில் — நாகரிகத்தில்? அவருடைய அந்தரங்க விசுவாசத்தைப் பெறுவதற்கு நான் மற்றவர்களை விட ஒரு படி உயர்வாக இல்லாவிட்டாலும் ஏதாவது ஒரு விதத்தில் ஈடாகவாவது இருக்க வேண்டுமே!



இதோ, வியாழன் இரவு போய் விடுகிறது. பிறகு, நடுவில் வெள்ளி, சனி— இரண்டே நாட்கள். அதற்குள் நான் என்னென்ன செய்துகொள்ள முடியும்? ஞாயிற்றுக்கிழமை காலையில் எப்போதையும் விடச் சீக்கிரமாகவே குளித்து விடலாம். அப்புறம் புடவை — எது தேவலை? ஒன்று கரை நன்றாக இருந்தால் கலர் நன்றாக இல்லை. இரண்டும் பிடித்திருந்தால் பழசாகப் போயிருக்கிறது! இதோ, இது புதிதுதான். ஆனால் நாலு தடவை கட்டிக் கசங்கிப் போயிருக்கிறதே!

ஜாக்கெட்டுத்தான் ஒன்றுமே சரியாயில்லை. நாலு நிறத் துணி வாங்கி வைத்து அப்படியே கிடக்கிறது. நாளைக்கே தைக்கக் கொடுப்போமா? அப்படி அவசரப்பட்டால் சமயத்திற்கு வராது. வந்தாலும் இதைச் சுட்டிக் காட்டிக் கேலி செய்வானே, அண்ணா!

வளையல்கள்? அதுதான் அதிகத் தொல்லை. இரண்டு அதிகமாகப் போனாலும் விகாரம். இரண்டு குறைந்தாலும் தரித்திரம்! நாலுக்காக நிறுத்திக் கொள்ள வேண்டும். கலர்? அன்றைக்கு என்று காலையில் யோசனை செய்து 'ட்ராய'ரை அலங்கோலம் செய்யாமல் முன் ஜாக்கிரதையாகத் தீர்மானம் செய்து எடுத்துத் தனியாக வைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

இந்த ஆறுமாத காலத்தில் நான் எவ்வளவு கெட்டுப் போய்விட்டேன்!

முன்போல்லாம் குறைந்தது அரைமணி நேரமாவது காலையிலும் சாயந்திரமும் பிடிலை வைத்துக்கொண்டு உட்காருவேன். மிகவும் தொந்தரவான வாத்தியம் ஏதேனும் உண்டு என்றால் அது பிடில்தான். இரண்டு நாள் சாதகம் செய்யாமல் நிறுத்தினால் போதும்; கை சொன்னபடி கேட்கிறதில்லை. என்ன பிடில் வேண்டிக் கிடக்கிறது! —அன்றைக்கு அம்மா கூடக் கோபித்துக் கொண்டாள்! அவள் கோபித்துக் கொண்டு பத்து நாள் ஆகியிருக்குமா? ''ஏ' தந்தி வேறே மாற்றிப் போட வேண்டும், அம்மா!'' என்று பொய் சொன்னேன். ஆமாம், பொய்தான் சொன்னேன். ''அது செய்ய எத்தனை நாள் ஆகும் உனக்கு?'' என்று மேற்கொண்டு கேட்டாள். ''திங்கட்கிழமை தான் அம்மா, எனக்கு ஒழியும்'' என்று சொல்லிவிட்டேனே. இப்போது அதைப் பெட்டியிலிருந்து எப்படி எடுப்பது? ஐயோ, மானம் போய்விடுமே!

ஆறு மாதத்தில் எத்தனை புத்தகம் படித்திருப்பேன்? உருப்படியானது ஒன்றும் கிடையாது. என்றாலும் படிக்கும்போது அதில் எவ்வளவு ஆறுதல்! பிறருடைய கஷ்டங்களை — கற்பனை தான் என்றாலும் — கவனித்து வரும்போது நம்முடைய மனதிலுள்ள ஏக்கம் சற்றுத் தணிகிறது. ஆனால் புத்தகத்தை மூடி விட்டால் வேதனை அதிகமாகிறதே! — புத்தகம் இந்த வேதனைக்கு மருந்தல்ல; மனதை மரத்துப் போகச் செய்யும் அபின்; லாகிரி! சாப்பிட்ட பின் சில மணி நேரமாவது வேலை செய்யும்; அதன் குணம் நீடிக்கும். புத்தகத்தை மூடிவிட்டதும் சிந்தனைப் பிசாசு உடனே எப்படியோ நம்மைத் தாவிப் பிடித்துக் கொண்டு விடுகிறது!

அது கிடக்கட்டும்: நல்ல தூக்கம் தூங்கிதான் நாள் எத்தனை ஆயிற்று!

முன்போல் அவர் வந்ததும் ஓடிப் போய் வராந்தாவில் நின்றுகொண்டு அவரை வரவேற்க முடியாதே! அவர் தான் ஆகட்டும், முன்போல அவ்வளவு சகஜமாகக் கன்னத்தை நிமிண்டவோ, காதைத் திருகவோ மாட்டார்! என்னிடத்தில் ஏதேனும் மாறுதலை எதிர்பார்த்துத்தான் வருவார். அந்த நாளில் அவர் விளையாட்டாக என் கையைப் பிடித்துக் குலுக்காத நாளே கிடையாது! — எல்லாம் நேற்றுப் போலத் தானே தோன்றுகிறது! — ஆம்; அவரைக் கண்டதும் இப்போது சிரிப்பது போல் லேசாகச் சிரித்து நிறுத்திக் கொண்டால் போதும்; அதற்குமேல் கூடாது. ஏதோ பரம ரகசியத்தை மனத்திற்குள் சாமர்த்தியமாக மறைத்து வைத்திருப்பவள் போல் இருக்கிறது இந்தப் பாவனை! அதுதான் சரி.

ஆமாம். அவரிடத்திலும் மாறுதல் இல்லாமலா இருக்கும்? இன்னும் ஒரு விரற்கிடை அவர் உயர்ந்துகூட இருக்கலாம். ஆனால் சிரிக்கும்போது அவருடைய கண்களில் வீசும் ஒளி, அவருக்கென்றே அமைந்த பிரத்தியேகச் சொத்து! கனமும் அழுத்தமும் கொண்ட அவருடைய குரலோ! — இதெல்லாம் மாறுதல் ஏற்படவே முடியாது.

இந்த இரண்டு புத்தகங்களும் அவர் கொடுத்ததே. என் பெயர் அவர் கைப்பட எழுதினது. கையெழுத்தில் கூட எவ்வளவு கம்பீரம், எவ்வளவு தன்னம்பிக்கை! எங்கே, அடுத்தாற் போல் சேர்த்து 'வெங்கடராமன்' என்று எழுதிப் பார்க்கட்டுமா? மெள்ள, பென்சிலால்! பிறகு அழித்துவிட்டால் போகிறது. 'ஸ்ரீமதி ராஜம் வெங்கடராமன்' என்றால் கேட்பதற்கு நன்றாக இல்லை?

★

இப்போது அம்மாவோடு நான் கூடமாட வேலை செய்வது அவளுக்கே ஆச்சரியமாய்த் தான் இருக்கிறது! எல்லா அறையிலும் மூலை முடுக்கில் குப்பை சேராமல் எடுத்துப் போட்டாயிற்று. அங்கங்கே மேஜை நாற்காலியை அழகாகத் தூக்கி வைத்துவிட்டேன்.



அவரேதான்!



வெளியூர் வாசி:—ஏனுங்க, போன வருசம் ஒல்லியா ஒடிசலா ஒருத்தர் 'கேஷ்'லே உட்கார்ந்திருந்தாரே. அவர் இப்போ இல்லீங்களா?

கேஷியர்:-நான்தான் ஐயா, நான்தான்!

மேஜை விரிப்பையும் மாற்றிப் புத்தகம் முதலானவற்றை ஒழுங்காக அடுக்கி வைத்துவிட்டேன். அண்ணாவினுடைய அழுக்குச் சட்டை, வேஷ்டி முதலானவற்றை 'கோட் ஸ்டாண்'டிலிருந்து எடுத்துக் கண்ணுக்கு மறைவில் கட்டிப் போட்டுவிட்டேன். இவற்றையெல்லாம் கவனித்து வந்த அவன், அம்மாவைப் பார்த்துக் கண் சிமிட்டுவது எனக்குத் தெரியாதா, என்ன!

சனிக்கிழமை சாயந்திரமும் வந்து விட்டது. இன்றைக்கு அம்மாவோடு இருந்ததில் ஒரு புதுக் காரியம் கற்றுக் கொண்டு விட்டேன். இப்போது எனக்கு ஜாங்கிரி செய்யத் தெரியும்—அநேகமாக!

ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணி. அந்த நாளில் அவர் எட்டரை மணிக்கெல்லாம் வந்துவிடுவது வழக்கம். இந்த நாளில் எப்படியோ! ஆனாலும் நான் என் அறையின் ஜன்னலண்டை தயாராக நின்று கொண்டிருந்தேன். சாலை வளைந்து வருவது இங்கிருந்து பார்த்தால் நன்றாகத் தெரியும்.

'டிங், டிங், டிங்' — அவருடைய சைக்கிள் மணிதான். நான் எதிர்பார்த்ததைவிட அவர் இன்று சீக்கிரமாகவே வந்துவிட்டார். அதோ, சைக்கிளிலிருந்து கீழே இறங்குகிறார். முன்னைவிட நாகரிகமாகத்தான் இருக்கிறது தோற்றம். அங்கவஸ்திரம் இல்லாமல் வெறும் 'ஷர்ட்' மாத்திரம்தான் என்றாலும், அதுவும் ஒரு மிடுக்காகத்தான் இருக்கிறது.

"சாமா! அம்மாவிடம் சொல்லு, என் வீட்டிற்கு விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள். இன்றைக்கு முழுவதும் எனக்கு வேலை சரியாக இருக்கும். அடுத்த ஞாயிற்றுக்கிழமைதான் இனி மேல்......"

ஹாலுக்குள் வரும்போது அவர் குரல் அவ்வளவு ஸ்பஷ்டமாகப் படவில்லை என் காதில்.

எவ்வளவு அவசரம்! அண்ணாவிடம் சொல்லிக் கொண்டு அவர் உடனே புறப்பட்டு விட்டார். நானும் ஜன்னலை விட்டு நகர்ந்து போயிருக்கலாம். ஆனால், என்னுடைய கால்கள் ஏன் இன்னும் நகர மறுக்கின்றன?

அடுத்த ஞாயிற்றுக்கிழமை! இன்னும் ஏழு நாள்! அம்மம்மா! அவை எப்படிப் போகும்?

சரி: அதுவும் நல்லதுக்குத்தான். ஜாக்கெட் நாலையும் தைத்துக் கொள்ளலாம். இந்தப் புது 'ஸில்க்' புடவைக்கும் 'இஸ்திரி' போட்டு எடுத்து வைக்கலாம். ஏன்? பிடிலைக்கூட மறுபடியும நன்றாகச் சாதகம் செய்து விடலாமே!

அதோ, சைக்கிளின் மேல் எந்தக் காலை வைத்து ஏறுவது என்பதைக் கூட மறந்து அவர் என்னைத் திரும்பிப் பார்க்கிறார்! ஆம்; கைக் குட்டையை எடுத்து வீசுகிறார்!—இதோ, ஜன்னலின் அருகே அவரையே பார்த்துக் கொண்டு நிற்கும் என்னைப் பார்த்துத்தான்!

கடைசி வேண்டுகோள்!

கோமதி ஸ்வாமிநாதன்

ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர் ஆனந்தம் பிள்ளைக்குத் தங்களுடைய ஒரே ஆப்த நண்பரான ஹைதர் காலத்து அல்பாகா கோட் எழுதியது:-

நமஸ்காரம். இருபது வருஷ காலமாக எவ்வளவோ இன்னல்களுக்கிடையே, ஏரெட்டுப் பெரிய ஆப்பரேஷன்களுக்குத் தப்பிப் பிழைத்து இன்னும் சில கிழிசல்களுடன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் எனக்கும், தரித்திரத்தினாலும் வறுமையினாலும் சல்லடைக் கண்கள் போல் துளைக்கப்பட்டிருக்கும் தங்கள் இருதயத்திற்கும் இடையே ஒருவிதப் பிணைப்பும் பாசமும் இருக்கிறதென்றே நான் நம்புகிறேன். இல்லையென்றால் தங்கள் மனைவி ஜாடிக்காரனிடம் என்னை எடுத்துக் கொடுத்தும், அவன் இரண்டு வாரம் கழித்துத் தங்களிடமே என்னை அதிக விலைக்கு விற்றிருப்பானா?

உமக்குக் கல்யாணமான புதிதில் நீர் எந்த உத்தியோகத்திற்குப் போகலாமென்று யோசித்துக்கொண்டிருந்தீரல்லவா? அப்போது உம்முடைய மாமனார், "உபாத்தியாயர் வேலை வேண்டாம்; அதைவிட வக்கீல் குமாஸ்தா வேலை எவ்வளவோ மேல்!" என்று கெஞ்சாத வண்ணமாய்க் கெஞ்சினாரே. கேட்டீரா? பிரமாதமாக முறுக்கிக்கொண்டு ஆபத்சகாய ராவ் ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயராக அமர்ந்தீர். பள்ளிக்கூடத்தில் நுழைந்த முதல் நாளே, ஒரு கால் ஒடிந்த நாற்காலியில் உட்கார்ந்து ஆபத்திற்கு உள்ளானீர். இதன் காரணமாக ஒரு வாரம் கால் சுளுக்கிக் கொண்டதால் ஒரு காலை சாய்த்து நீர் நடக்கப்போக, உமக்கு "நொண்டி வாத்தியார்" என்று பெயர் வந்தது! அப்புறம் ராஜபார்ட் மாதிரி நீர் நடந்தும், அந்தப் போக்கிரிப் பயல்கள் உமக்கு வைத்த பெயரை வாபஸ் வாங்க மறுத்தே விட்டார்கள்!

உம்முடன் வாசித்தபோது சதா பெஞ்சு மேலேயே நின்று கொண்டிருந்த 'தூங்குமூஞ்சி துரைசாமி' வக்கீல் குமாஸ்தா உத்தியோகம் பார்த்து, இப்போது வீடு, வாசல் எல்லாம் வாங்கி விட்டான். நீரோ கோவாப்ரேடிவ் பாங்கியில் வாங்கிய கடனைக் கொடுக்க வழி தெரியாது ஏழு வருஷமாய் வட்டி மாத்திரம் கட்டி வருகிறீர்!

உம்மிடம் படித்தானே, பத்து வருஷத்திற்கு முன்னால்—'கோணமண்டை குப்புஸ்வாமி' — ஞாபகமிருக்கிறதா? டியூஷன் வேறு வைத்துக்கொண்டு உம் பிராணனை வாங்கினானே, அவன் இப்போது டிப்டி கலெக்டராம்! நீர் என்னடா என்றால் அவனுடைய மண்டையில் கணக்கே ஏறவில்லை என்று அப்போது உயிரை விட்டீர்!

என் விஷயத்தைப் பற்றி ஆரம்பித்ததும், என்னை அறியாமலேயே நான் உம்மைப் பற்றித்தான் பேசுகிறேன்! உங்கள் மீது எனக்கு அவ்வளவு பாசம்.



வெய்யிலிலும் மழையிலும், வெக்கையிலும் குளிரிலும், பள்ளிக்கூடத்து இன்ஸ்பெக்டர் வரும்போதும் பங்கீடு அரிசி வாங்கும் போதும், ஆனந்தத்திலும் ஆபத்திலும் உடம்போடு உடம்பாய் ஒட்டியிருக்கும் நான், உம்மிடம் ஒரு வேண்டுகோளுடன்தான் இப்போது வந்திருக்கிறேன். ஆசாபங்கத்தினால் ஆத்திரம் கொண்ட உங்கள் அகமுடையாள் புதுப் புடவை வேண்டுமென்று உம்மைப் பிடுங்கிப் பிடுங்கி எடுத்த போதிலும் மனம் தளராமல் உள்ளம் உடையாமல், நெஞ்சு குமுறாமல் புன்சிரிப் புடனேயே அவளை ஐந்தாறு வருஷமாக ஏமாற்றிக் கொண்டு வருகிறீரே,

அந்த மாதிரி என்னையும் ஏமாற்றக் கூடாது. நீர் கூடிய சீக்கிரமே என்னுடைய குறையைக் கவனிக்காமற் போனால், வாழ்க்கைப் பாதையில் நான் உம்மைப் பின் பற்றி இனி வரமுடியாது. என்னுடைய குறை என்னவென்றால், என் வயிற்றுப் பக்கத்தில் பெரிய கிழிசல் ஒன்று ஏற்பட்டுச் சுமார் இரண்டு வருஷங்களாகின்றன. அதைப் பற்றி உம்மிடம் சொல்லி உமக்குத் தொந்தரவு கொடுக்க நான் இவ்வளவு நாளாய் விரும்பவில்லை. நீரும் அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை.

பெரிய மனிதர்கள் அற்பத் தலைவலியைப் பிரமாதமான வியாதியாக வெளிக்குக் காட்டிக் கொள்வதுபோல், நான் சிறிய கிழிசலைப் பெரிதாகக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. நிஜமாகவே இது ஒரு 'மேஜர் கேஸ்'தான்! 'அபெண்டிசிடிஸ்' என்று வைத்துக் கொள்ளுமேன்! சிகிச்சை உடனே தேவை.

இப்போது காருண்ய சர்க்கார் கருணை கூர்ந்து உமக்கு மாதம் இரண்டு ரூபாய் சம்பளம் உயர்த்தியிருக்கிறார்கள் அல்லவா? அந்த மகத்தான அதிர்ஷ்டத்தில் கிருபை கூர்ந்து எனக்கு ஒரு ஒட்டுப் போட்டு வயிற்றுக் கிழிசலை மூடும்படித் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு செய்தீரானால் எனக்கு இலவசமாக 'அபெண்டிசிடிஸ் ஆபரேஷன்' செய்வித்த புண்ணியம் உமக்குக் கிடைக்கும். நீர் அப்படிச் செய்யாமற் போனால் என் போன்ற நண்பர்களைக் கலந்து ஆலோசித்து, நாங்களும் உங்களைப்போல் ஊர்வலமாகச் சென்று, கடைசியில் வேலை நிறுத்தம் செய்ய நேரிடும்.

அடுத்த வாரம் இன்ஸ்பெக்டர் வேறு பள்ளிக்கூடத்திற்கு வரப் போகிறார். நான் வேலை நிறுத்தம் செய்தால் நீர் திண்டாட வேண்டியதுதான்! ஆகவே, இப்போதே உங்களுக்கு எச்சரிக்கை செய்து விட்டேன்—என் கடைசி வேண்டுகோளை அங்கீகரித்துத் தகுந்த சமயத்தில் என் தேவையைப் பூர்த்தி செய்வீராக!

தங்கள் ஆப்த நண்பன்,
அல்பாகா கோட்.

காலக்ஷேபம்

காரணம் என்ன?

தெருவில் போய்க் கொண்டிருந்த முன் பின் பழக்கம் இல்லாத ஒரு மனிதரிடம் சென்று சங்கரன் நாலணா கடன் கேட்டான்.

அந்த மனிதர் ரொம்ப ஆச்சரியத்துடன், "முன் பின் தெரியாத என்னிடம் வந்து தாங்கள் கடன் கேட்பது எனக்கு அதிசயமாக இருக்கிறது!" என்றார்.

"முன்பின் தெரியாததால்தான் தங்களிடம் வந்து கேட்கிறேன். தெரிந்தவர்கள் எங்கே கொடுக்கிறார்கள்?"

அவருக்குத் தெரியாது

நீதிபதி கைதிக்கு ஐந்து வருஷம் கடுங் காவல் தண்டனை அளித்தார். கைதியோ அதைக் கொஞ்சங்கூட லட்சியம் செய்யாமல் சிரித்துக்கொண்டே வெளியே வந்தான். நீதிபதிக்குக் கோபம் உண்டாயிற்று. அவர் கைதியை நோக்கி, "நான் கொடுத்த கடுந் தண்டனையை நினைத்து நீ சிரிப்பதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டார்.

கைதி மிக்க பணிவுடன், "எஜமான்! போன மாதம் நான் டாக்டரைப் பார்த்தேன். இன்னும் மூன்று மாதம்தான் நான் உயிரோடு இருப்பேன் என்று அவர் சொன்னார். தாங்களோ ஐந்து வருஷத் தண்டனை கொடுத்திருக்கிறீர்கள். இதை நான் எப்படி அனுபவிக்கப் போகிறேன் என்பதை நினைத்ததும் எனக்குச் சிரிப்பு உண்டாயிற்று!" என்றான்.

இரண்டும் இருக்கிறது

"நீ என்னைக் கல்யாணம் செய்து கொள்கிறாயா?" என்று ஒரு வாலிபன் ஒரு பெண்ணைக் கேட்டான்.

"நான் சரியென்று எப்படிச் சொல்வது? யோசித்துச் சொல்லுகிறேன். ஆனால், ஒன்று மாத்திரம் நிச்சயம். தைரியமும் புத்தி நிட்சண்யமும் உள்ள புருஷனைத்தான் நான் கல்யாணம் செய்துகொள்வேன்."

"அப்படியா, நல்லது! — நீ தண்ணீரில் மூழ்கப்போகும் சமயத்தில் நான் உன்னைக் காப்பாற்றவில்லையா? அது என் தைரியத்தைக் குறிக்கிறது அல்லவா?"

"தைரியத்தைக் குறிக்கிறது. ஆனால், புத்தி நிட்சண்யத்தைக் குறிக்கவில்லையே!"

"ஏன்? அந்தப் படகை முதலில் கவிழ்த்து விட்டவனும் நானே அல்லவா?"

அவன் கவலை

"இன்னும் நான்கைந்து வருஷத்திற்குள் என் கம்பெனி ரொம்ப நல்ல நிலைமைக்கு வந்துவிடுமென்று என்னுடைய நண்பர்கள் நம்பிக்கையாகச் சொல்கிறார்கள்."

"அப்படியானால், நீங்கள் ஏன் சதா காலமும் கவலைப்பட்டுக் கொண்டே இருக்கிறீர்கள்?"

"ஒன்றும் இல்லை; அந்த நம்பிக்கையெல்லாம் பாழாகிப் போய்விடுமோ என்றுதான் நான் கவலைப்படுகிறேன்!"

மங்கையர்களின் முக விலாசத்திற்கே

அர்ப்பணம் செய்யப்பட்டது.



ஜாப்கோ ஸ்னோ

உங்கள் எழிலை அதிகப் படுத்த இதைவிடச் சிறந்தது வேறெதுவும் இல்லை

•

ஜயபாரதம் கோ.,

மல்லேஸ்வரம் - பெங்களூர்



இந்த

நர்ஸ்

கூறுகிறார்

"டாக்டரின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டிய அவசியமே இல்லாத ஆயாஸம், அஜீர்ணம், மற்றும் இதர வயிற்றுக் கோளாறுகளுக்கு நான் எப்பொழுதும் 'பிஸ்மாக்'ஐ (பைகரேடெட் மெக்னீஷியா) சிபார்சு செய்கிறேன்." பௌடராகவோ, பில்லைகளாகவோ சாப்பிடுவதற்கு சுலபமாகவும் குஷியாகவும் இருக்கும். தற்கால அறுவறுப்பான சாப்பாட்டிற்குப் பிறகு உட்கொண்டால், பிற்பாடு எவ்வித கோளாறுகளும் ஏற்படாது என்பது திண்ணம். உங்களது மருந்து வியாபாரிகளிடமாவது கடைக்காரர்களிடமாவது 'பிஸ்மாக்' கேளுங்கள்.

'பைகரேடெட்' மக்னீஷியா

BISMAG

பிஸ்மாக் லிமிடெட்

பிராய்டன் ரோடு, லண்டன், N. 16

மரியாதை தெரிந்தது!

அரட்டைக்கல்லி

பூங்குந்தனூர் ஜமீன்தாரிடம் முருகன் என்பவன் வேலை பார்த்து வந்தான். ஒருநாள் ஜமீன்தார் அவனை அழைத்து, "அடேய், முருகா! இனிமேல் நீ வாரா வாரம் ஒரு காரியம் செய்ய வேண்டும். இங்கிருந்து நான்கு மைல் தூரத்தில் ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே என் உறவினர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் வாராவாரம் நான் கொடுக்கும் காய் கறிகளைக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வரவேண்டும்."

"சரி, எஜமான்!" என்றான் முருகன்.

அன்றையத் தினத்திலிருந்து ஒவ்வொரு வாரமும் காய்கறிக் கூடையைத் தூக்கிக்கொண்டு, அடுத்த கிராமத்துக்குச் சென்று வந்தான் முருகன். ஒரு முறையாவது ஜமீன்தாரின் உறவினர் முருகனிடம் இரக்கப்பட்டு ஓரணாக்கூட இனாம் கொடுத்ததில்லை.

முருகனுக்கு எப்படியாவது அவருக்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்று தோன்றிற்று. ஆகவே, அவன் வழக்கம்போல் அவருடைய வீட்டுக் கதவை அன்று மெதுவாகத் தட்டவில்லை; 'தட தட'வென்று இடித்தான். அதைக் கேட்ட ஜமீன்தாரின் உறவினர் பரபரப்புடன் வந்து கதவைத் திறந்தார். உடனே முருகன் மின்னல் வேகத்தில் உள்ளே நுழைந்து, காய்கறிக் கூடையைத் தொப் பென்று கீழே போட்டுவிட்டு, "நான் போகிறேன்!" என்றான் பரபரப்புடன்.

ஜமீன்தாரின் உறவினருக்கு ஒன்றும் புரியவில்லை. "முருகா! உனக்கு மட்டு மரியாதை கொஞ்சங்கூடத் தெரியவில்லை. இப்படியா நீ தடதடவென்று காரியம் செய்வது? இதோ, நான் செய்து காட்டுகிறேன், பார்!" என்று சொல்லி, அவர் முருகனை அங்கிருந்த ஒரு நாற்காலியில் உட்கார வைத்தார். தம்மை வேலைக்காரனைப் போல் பாவித்துக் கொண்டு காய்கறிக் கூடையைத் தூக்கிக் கொண்டு வந்தார். அதை முருகனின் காலடியில் மெதுவாக வைத்துவிட்டுக் கைகூப்பி, "சாமி! நமஸ்காரமுங்க; எஜமான் இந்தக் காய் கறிகளை உங்களிடம் கொடுத்துவிட்டு வரச் சொன்னாருங்க!" என்றார்.

உடனே முருகன், "சரி, ரொம்ப சந்தோஷம். போய் வருகிறாயா? இந்தா, இதை வாங்கிக்கொண்டு போ!" என்று சொல்லித் தன்னிடமிருந்த இரண்டணாவை எடுத்து அவருக்கு முன்னால் நீட்டினான்.

அந்த மனிதருக்குத் தூக்கிவாரிப் போட்டது. "அடாடா! நாமல்லவா இவனிடம் மரியாதை என்பது என்னவென்று கற்றுக் கொள்ளும்படி ஆகிவிட்டது!" என்று எண்ணியவராய், "முருகா! நீ புத்திசாலி. உன்னுடைய கஷ்டம் தெரியாமல் நான் இதுவரை சும்மா இருந்துவிட்டேன். இந்தா, இதை வாங்கிக்கொள்!" என்று சொல்லி, ஒரு ரூபாயை எடுத்து அவனிடம் கொடுத்தார். முருகனும் சந்தோஷத்துடன் அதைப் பெற்றுக் கொண்டு திரும்பினான்.



CHITRALAYA

தெய்வம் உண்டா?

எஸ். ஆர். ராமானுஜம்

"ஸார், பேப்பர்!" என்று பத்திரிகை விற்கும் பையன் கூவிக்கொண்டு போனான். ஒரு அணாவைக் கொடுத்துப் பத்திரிகையை வாங்கிப் பார்த்தேன். இண்டர்மீடியட் பரீக்ஷையின் முடிவுகள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. காதலி, காதலனைத் தேடுவதுபோல் என் கண்கள் ஆவலுடன் நம்பரைத் தேடின. ஆனந்தத்தால் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. "அம்மா, அம்மா!" என்று கத்திக்கொண்டே வீட்டிற்குள் ஓடினேன். அம்மா சமையலறையில் இருந்தாள். "நான் பரீக்ஷையில் தேறிவிட்டேன், அம்மா!" என்றேன். அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தது.

மேலே படிக்கலாமென்றால் நாளுக்கு நாள் அம்மாவின் உடம்பு தளர்ந்து கொண்டே வந்தது. நான் படிப்பதற்காக அம்மா, இதுவரை ஓடாக உழைத்து எனக்குப் பணம் அனுப்பி வந்தாள். இனி அம்மாவின் உடம்பு என் சம்பாத்தியத்தால் உணவு பெற வேண்டிய நிலையில் இருந்தது. ஆகவே நான் படிப்பதை அத்துடன் நிறுத்தி விட்டேன்.

ஒரு நாள் சாயங்காலம் எதிர் வீட்டிலிருந்த கிழவர் என்னைக் கூப்பிட்டார். அந்தப் பெரியவர் கிராமத்து முதலாளியிடம் கணக்குப் பிள்ளையாயிருந்தார். ஏதோ சொற்ப சம்பளம் கிடைத்து வந்தது. ஆனால், அவருடைய வாழ்க்கையைப் பார்த்தால் அற்பச் சம்பளம் வாங்குபவராக யாரும் மனதில் கற்பனைகூடச் செய்ய முடியாது.

"என் தம்பி, மேலே படிக்கவில்லையா?" என்று கேட்டார் அவர்.

"இல்லை" என்றேன்.

"வேறு என்ன செய்யப் போகிறாய்?"

"கடவுளுக்குத்தான் வெளிச்சம்!" என்றேன்.

"என் உடம்பு தளர்ந்து விட்டது; என்னால் வேலையைச் சரிவரக் கவனிக்க முடியவில்லை. உனக்கு அந்த வேலையைச் செய்து வைக்கிறேன்; பார்க்கிறாயா?" என்று கேட்டார் அவர்.

பசியோடிருப்பவருக்கு அன்னம் கிடைத்தால் வேண்டாமென்று தலையாட்டுவாரா? மறுநாளே அவருடைய வேலையை நான் ஒப்புக்கொண்டேன்.

2

என்னுடைய முதலாளியின் வீடு கிராமத்தின் தெற்குக் கோடியில் இருந்தது. அவருக்கு ஜமீன்தார் என்கிற பட்டம் இல்லையே தவிர சொத்து ஏராளமாய் இருந்தது. சுற்றியிருக்கும் பத்துக் கிராமங்களும் அவருக்கு அடக்கம். பெயர் கோபாலசாமி நாயுடு.

மறுநாள் முதல் முதலாளியின் வீட்டிற்குப் போய் நான் கணக்கு எழுத ஆரம்பித்தேன். அடிக்கடி பக்கத்துக் கிராமங்களுக்குப் போய் நான் பாக்கி வசூலிக்க வேண்டியிருந்தது. அதற்காக ஒரு மாட்டு வண்டி தனியாய் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது.

ஒரு நாள் பக்கத்துக் கிராமம் ஒன்றுக்கு வசூல் செய்துகொண்டு வருவதற்காகப் புறப்பட்டேன். மாட்டின் சலங்கைச் சத்தத்தைக் கேட்டவுடன் கிராமத்து ஜனங்கள் ஓடிவந்து என்னை நமஸ்கரித்தார்கள். மிகவும் பயபக்தியுடன் கையைக் கட்டிக் கொண்டு எல்லோரும் என் முன்னால் நின்றார்கள். குடியானவன் ஒருவனை வட்டி கேட்கும்போது அவன் என் காலடியிலே விழுந்து விட்டான். "நாம், நாம்" என்று நான் விலகிக் கொண்டேன்.

"நீங்கள் புது மனிதர்; இளைஞர். என்னுடைய வீட்டிற்கு வந்து பாருங்கள். என் நிலைமையைக் கண்டு நீங்கள் இரக்கம் கொள்வீர்கள்!" என்றான் அவன்.

உள்ளே போய் மேலே அண்ணாந்து பார்த்தேன். கூரை வீட்டு முகட்டின் வழியாக ஆகாயத்தின் நீலநிறம் அழகாய்த் தெரிந்தது. ஐந்தாறு மண் பாத்திரங்கள், தகரப் போகணிகள், தூணில் ஒரு ஆட்டுக் குட்டி, ஓட்டைக் கட்டிலில் ஒரு மெலிந்த பையன்!—அவன் என்னைக் கண்டதும் பரபரப்புடன் எழுந்திருக்க முயன்றான்.

"இவன் எனக்கு ஒரே பிள்ளை. இவன் பிழைத்தால்தான் என் குடும்பம் தழைக்கும். பணமில்லாமல் எந்த வைத்தியன்தான் மருந்து கொடுப்பான்? இவனுக்காக முதலாளியின் வட்டியை நிறுத்தினாலோ அவருடைய கோபத்திற்கு ஆளாக வேண்டி நேரும்!" என்று சொல்லிக் கொண்டே, ஒரு கந்தைத் துணியில் சுற்றி வைத்திருந்த இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து என்னிடம் கொடுத்தான்.



ஊருக்குத் திரும்பும் போது கூடக் கட்டிலில் படுத்திருந்த அந்தப் பையனின் உருவம் என் மனத்தை விட்டு அகலவில்லை. முதலாளிக்கு வட்டி கொடுப்பதற்காகத் தான் அரும்பாடு பட்டுச் சம்பாதித்த பணத்தை— தன் ஒரே மகனைக் காப்பாற்றக் கூட வகையில்லாமல் அழுது விட்டு மனவேதனைப் படும் அந்தக் குடியானவனைப் பற்றி நினைத்துப் பார்த்த போது, எனக்குப் பட்டணங்களின் ஞாபகம் வந்தது. எங்கு நோக்கினும் உயர்ந்த அழகான கட்டிடங்கள்; காப்பி ஹோட்டல்கள்; சினிமா தியேட்டர்கள்; சுறுசுறுப்பான ஜனங்கள்; அவர்களுடைய விதவிதமான ஆடைகள்! இன்னும் அவர்கள் பேசும் அந்த அன்னிய பாஷை! இவை ஒருபுறம் — மற்றொருபுறம் ஓட்டைக் குடிசைகள்; இடிந்துபாழடைந்த கோயில்கள்; மண் பாத்திரங்கள்; எந்த நேரமும் ஏக்கத்தால் வாடும் உள்ளங்கள்; தன் தாய் மொழியைக்கூடச் சரியாய் உச்சரித்துப் பேசத்தெரியாத பரிதாபகரமான ஜனங்கள்!

இப்படியெல்லாம் என்னவெல்லாமோ எண்ணிக்கொண்டு சென்ற என்னை நோக்கி, "சாமி, இறங்குங்க! வீடு வந்துவிட்டது!" என்றான் வண்டிக்காரன். நானும் இறங்கிவிட்டேன்.

இதற்கு அடுத்த வாரம் இன்னொரு கிராமத்திற்கு நான் போகவேண்டி நேர்ந்தது. வண்டியிலிருந்து கீழே இறங்கியதும் அந்தக் கிராமத்தில் ஒருவரைக் கூட நான் வெளியே காணவில்லை. பாழடைந்த ஊர் மாதிரி தோன்றியது. விசாரித்ததில், கிராமம் பூராவும் அம்மை நோய் பரவியிருப்பதாகத் தெரிந்தது. வீட்டுக்கு வீடு அம்மை! தாலுகாவில் இரண்டு 'வாக்ஸினேட்டர்'கள், 'ஹெல்த் இன்ஸ்பெக்டர்' எல்லோரும் தான் இருந்தார்கள். ஆனால் நோயால் வாடும் ஜனங்களுக்குச் சிகிச்சை செய்ய ஒருவரும் இல்லை. உடனே நான் 'வாக்ஸினேட்ட'ருக்கு ஆள் அனுப்பினேன். அவர் வந்து சேருவதற்குள் இரண்டு குழந்தைகள் இந்த உலகத்தின் மேல் வெறுப்புற்றுப் பரலோகம் சென்றுவிட்டன. இந்தப் பாப உலகைப் பார்க்கக்கூடாதென்று ஐந்தாறு பேருடைய கண்கள் வேறு குருடாகி விட்டன!

ஆதரவற்ற அந்த ஜனங்களை விட்டுப் பிரியும்போது, நாக்கை கோயிலில் பலி பீடத்தினருகே நிற்கும் ஆடுகளின் ஞாபகம் தான் வந்தது எனக்கு!

3

நல்ல கோடை காலம். வாயு பகவான் செத்துப் போய்விட்டானோ என்று நினைக்கும்படி அவ்வளவு புழுக்கமாயிருந்தது. வராந்தாவில் உட்கார்ந்து கணக்கு எழுதிக் கொண்டிருந்த நான், யாரோ ஓடிவரும் சத்தம் கேட்டுத் தலைநிமிர்ந்து பார்த்தேன்.



அடுத்த கிராமத்தான் ஒருவன் உடம்பெல்லாம் வியர்வை கொட்ட என் முன்னால் வந்து நின்றான். "எஜமான் இல்லையா?" என்று அவன் என்னைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, "என்ன சமாசாரம்?" என்று விசாரித்த வண்ணம் அவரே அங்கு வந்தார்.

"நிலத்தில் உழுதுகொண்டிருந்தேன். ராமக் கோனான் வந்து 'உழக் கூடாது!' என்று வழி மறித்து விட்டான். 'ஏன்?' என்று கேட்டதற்கு, நான் அந்த நிலங்களைக் குத்தகைக்குப் பிடித்திருக்கிறதாகச் சொன்னான். தங்களைக் கேட்கலாமென்று வந்தேன்!" என்றான்.

"ஆமாம், ராமக் கோனானிடம் நான்தான் சொன்னேன். நீ கொடுக்கும் அற்பக் காசுக்கு உனக்கே விடவேண்டுமென்று சட்டமா, என்ன?"

"என்ன, எஜமான்! நீங்களே இப்படிச் சொல்றீங்களே? இத்தனை வருஷங்களாக நான் உழுது வந்திருக்கிறேன்; என்னிடமிருந்த எருவையெல்லாம் கொட்டி நிலத்தைப் பண்படுத்தி யிருக்கிறேன்; சமயத்தில் இப்படிக் காலை வாரிவிட்டால் ஏழைகளாகிய நாங்கள் எப்படிப் பிழைப்பது?"

"விஷயத்தை ஏன் வளர்த்துகிறாய்? நிலம் வேண்டுமானால் குத்தகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும். இல்லாவிடில் நிலத்தை விட்டுவிட வேண்டும். உனக்கு எது சம்மதம்?"

"தாங்கள் தானே எஜமான், இந்த மாச ஆரம்பத்திலே எனக்குக் குத்தகை விடுவதற்கு ஒப்புக்கொண்டீர்கள். சொன்ன வார்த்தையைக் காற்றில் பறக்க விடுவது தங்களைப் போன்ற பெரிய மனிதர்களுக்கு அழகாகுமா?"

"சீ, நாயே! நடிப் போ! யாருடைய சொத்து என்று உழுகிறாய்? 'கேஸ்' போட்டு உன்னை ஜெயிலுக்கு அனுப்பி விடுவேன், ஜாக்கிரதை! — அரிச்சந்திரனிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டால் வேறு வார்த்தை பேசக் கூடாதோ?"

கேஸ், ஜெயில் என்றவுடன் குடியானவன் நடுங்கிவிட்டான். "நீங்கள் சொல்வதைக் கேட்கிறேனுங்க!" என்றான். உடனே புதிதாக ஒரு குத்தகைப் பத்திரம் அதிகத் தொகைக்கு எழுதப்பட்டது. நடுங்கும் கைகளுடன் அந்தப் பத்திரத்திலே அவன் கையெழுத்துப் போட்டுவிட்டுச் சென்றான்.

4

அன்று மாலை வெளி வராந்தாவில் என் முதலாளியும் அவருடைய ஆப்த நண்பர்களும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். என்ன வெல்லாமோ பேசி, கடைசியில் அவரவர்கள் தங்கள் சொந்தப் பெருமையைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள்.

ஒருவர் சொன்னார்: "சர்க்காரிடமிருந்து எனக்கு ராவ்பகதூர் பட்டம் கிடைத்திருக்கும்போது என்னுடைய பெருமைக்கு வேறு அத்தாட்சி என்ன வேண்டும்?"

அவருக்குப் பிறகு என் முதலாளி ஆரம்பித்தார்: "நான் ஒரு விரலை அசைத்தால் இந்தச் சுற்று வட்டாரமே திரண்டு எழும்; ஒரு விரலை மடக்கினால் எல்லோரும் என் காலடியில் வந்து விழுவார்கள்! என்னை யாராவது எதிர்த்துப் பேசினார்களோ, அவர்களுடைய கதி என்ன ஆகும் தெரியுமா?"

இந்தச் சமயத்தில் எஜமான் வீட்டு மாட்டுக்காரப் பையன் மேல் மூச்சு வாங்க ஓடோடியும் வந்து, "நம்ம மாடுகளையெல்லாம் உப்புக் கிணற்றுச் சுப்பையத் தேவன் மகன் பத்திக் கொண்டு போய் 'பவுண்'டிலே அடைத்துவிட்டான், சாமி! 'ஐயா

கிட்டே போய்ச் சொல்லுவேன்' என்றேன். 'போடா, பயலே! போய்ச் சொல்லு!' என்று என்னை அடிக்க வந்துவிட்டான்!" என்று சொல்லி அழுதான்.

அவமானமும் ஆத்திரமும் அடைந்த எஜமான், உடனே சுப்பையத் தேவனைக் கூப்பிட்டு வரும்படி ஓர் ஆளை அனுப்பினார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் தேவன் வந்து நாயுடுவுக்கு நமஸ்காரம் செய்தான்.

"மாடுகளை 'பவுண்'டில் கொண்டுபோய் மூடினது உன்னுடைய மகன்தானே?"

"ஆமாம்."

"எந்தக் காரணத்திற்காக?"

"மாடுகள் புஞ்சையில் ஒரு நாள் மேய்ந்தால், போனால் போகிறதென்று பேசாமலிருக்கலாம். தினமும் அதே வாடிக்கையாயிருந்தால்?—எனக்கு இருப்பது ஒரே தோட்டம். அதில் விளைச்சல் சரியாய் இல்லையென்றால் எங்கள் குடும்பம் என்ன ஆவது?"

"நமது மாடுகள் என்று உனக்குத் தெரியுமல்லவா?"

"தெரியும்; அதனால்தான் மாட்டுக்காரன் உங்களது பெயரை வைத்துக்கொண்டு இறுமாப்பு அடைந்திருக்கிறான்! பயிர், பச்சைகளில் மாடுகளை விட்டுவிட்டு, அவன் பாட்டுக்கு மரங்களில் ஏறி விளையாடிக் கொண்டிருக்கிறான்!"

"என்னிடம் வந்து ஏன் சொல்லக் கூடாது?"

"முன்னே இரண்டு தடவை வந்து சொன்னேன்; நீங்கள் அலட்சியம் செய்தீர்கள். மாடுகளை மேய்த்தால் நிலத்தில் சாணம் விழுந்து நல்ல உரமாகும் என்று எண்ணம் செய்தீர்கள்!—நானும் மனிதன் தானே? என் குடும்பமும் நடக்க வேண்டாமா?"

"நீயும் மனிதன்தான், நாயே! இப்பொழுது பார், என் மாடுகளை 'பவுண்'டில் அடைத்ததுபோல் உன்னையும் இந்தத் தூணில் கட்டி......?—அடேய்! யாரடா, அங்கே?" என்று உறுமிக் கொண்டே நாற்காலியை விட்டு எழுந்தார் நாயுடு.

அதுவரை தேவனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த அவனுடைய குமாரன் முன்னால் வந்து நின்று, "யாரடா தூணில் கட்ட வருபவன்? எந்தக் கை என் தகப்பன்மேல் விழுகிறதோ, அந்தக் கை இரண்டாக ஒடிந்து தரையில் விழுந்து விழும், ஜாக்கிரதை!—ஏன், ஐயா! உம்முடைய பணத் திமிரினால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்கிற நினைப்பா?" என்று கர்ஜித்தான்.

தன் வாழ்நாளிலேயே காணாத இந்த எதிர்ப்பைக் கண்டு கோபாலசாமி நாயுடு கற்சிலை போல் நின்றார்.

எங்களையெல்லாம் பார்த்து அவன் மறுபடியும் சொல்லலானான்: "சொல்லுங்கள் ஐயா, நியாயத்தை! இவர் செய்யும் அக்கிரமங்களுக்கெல்லாம் உடன்பட்டிருக்க வேண்டும். இல்லாவிடில் செத்துச் சுண்ணாம்பாக வேண்டும். இவருடைய மாடுகளை 'பவுண்'டில் அடைத்தது இவருக்கு அவமானமென்றால், இப்பொழுது என் தகப்பனை இத்தனை பேருக்கு முன்னால் இவர் அவமானப்படுத்தவில்லையா? இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?" என்று சொல்லிவிட்டுத் தன் தகப்பன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மடமட வென்று நடந்தான்.

5


மறுநாள் காலையில் நான் வழக்கம்போல் வேலைக்குச் சென்றேன். கூடத்தில் ஐந்தாறு பேர் கீழே உட்கார்ந்திருந்தார்கள். முதலாளியின் கையில் ஏதோ ஒரு காகிதம் இருந்தது. அவர் என்னைக் கூப்பிட்டார்; போனேன். "இதைக் கொண்டு போய்க் கோர்ட்டில் தாக்கல் செய்துவிட்டு வா! இவர்கள் எல்லாம் சாட்சி சொல்வார்கள். வக்கீலிடம் விவரத்தை எடுத்துச் சொல்லு!" என்று கையில் ஒரு புரோநோட்டைக் கொடுத்தார். நான் 'நோட்'டை வாசித்துப் பார்த்தேன். 'தன் குடும்பச் செலவுக்காக ரூபாய் 500 பெற்றுக்கொண்டு சுப்பையத் தேவன் கோபாலசாமி நாயுடுவுக்கு எழுதிக் கொடுத்த சொக்க அண்டிமாண்டு' என்றிருந்தது.

என் உடம்பெல்லாம் வியர்த்தது. ஒரு மனிதனைக் கொன்று, அவன் உடம்பை ஒரு பிடி சாம்பலாக்குவதற்காக இந்த மனிதன் என்னை அக்கினி மூட்டச் சொல்லுகிறான். எவ்வளவு அருமையான கைங்கரியம்!

"எந்தக் குற்றத்திற்காக அவன்மேல் பழி வாங்க இந்தக் காரியம் செய்கிறீர்கள்?" என்றேன்.

முதலாளி என்னை மேலும் கீழும் பார்த்தார். "உனக்கு எப்பொழுது பைத்தியம் பிடித்தது?" என்று கேட்டார்.

நிரபராதி!



போலீஸ்காரன் :— ஏய், கீழே பாரும்! நீர்தானே அந்த மனிதனின் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டு மண்டையை உடைத்தீர்?—வாரும், ஸ்டேஷனுக்கு!

சாப்பிடுபவர் —தான் நிரபராதிங்க: பசிக்கு ஒரு மெது வடையை வாங்கிப் பிட்டுத் தின்பதற்காகப் பிடிக்க இழுத்தேனுங்க; அது நழுவி அவர் தலையிலே விழுந்து விட்டதுங்க!

"உமக்குக் கீழே வேலை பார்க்கும் எனக்கு இன்னும் பைத்தியம் பிடிக்காமலிருப்பதுதான் ஆச்சரியம்! இந்த மாதிரி ஈனத்தனமான காரியங்களால் உங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமா?"

"புராணத்தை விரிக்க வேண்டாம்; சொன்னதைச் செய். நான் சொல்வதைக் கேட்பதற்காகத்தான் நீ இருக்கிறாய்; நீ சொல்வதைக் கேட்பதற்காக நான் இல்லை."

"முடியாது; என்னால் ஒருக்காலும் முடியாது! மானங்கெட்ட இந்தக் காரியத்தைச் செய்வதைவிட வீடு வீடாகப் பிச்சையெடுத்து நான் சாப்பிடுவேன். போய் வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு வெளியே வந்துவிட்டேன்.

ஒரு வாரம் கழிந்து அன்றைக்குக் கூடத்தில் பார்த்த பெரிய மனிதர்களில் இருவர் என் வீட்டிற்கு வந்தார்கள்.

"முதலாளி உங்களுடைய சம்பளத்தைக் கொடுத்துவிட்டு வரச் சொன்னார்!" என்று சொல்லி அவர்களில் ஒருவர், என்னிடம் ஒரு கத்தை ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்தார்.

எல்லாவற்றையும் பொறுமையுடன் எண்ணிப் பார்த்துவிட்டு, "எனக்குச் சேர வேண்டிய சம்பளம் முப்பது ரூபாய். மீதி ஐந்நூறு ரூபாய் எப்படி வந்தது?" என்று கேட்டேன்.

"உங்களுடைய சிரமபரிகாரத்திற்கு உபகாரம்!" என்றார்கள்.

"நான் என்ன சிரமப்பட்டிருக்கிறேன்?"

"நாளைக்கு நீங்கள் நம் முதலாளியிடம் சப்பையத் தேவன் ஐந்நூறு ரூபாய் ரொக்கமாகப் பெற்றுக் கொண்டதாகச் சாட்சி சொல்ல வேண்டும்!"

எனக்கு விஷயம் விளங்கிற்று. "ஒரே ஒரு பொய்! அந்தப் பொய்யின் விலை ஐந்நூறு ரூபாய்!" என்று எண்ணி என் மனம் பிரமித்தது.

உடனே எனக்குத் தேவனின் ஞாபகம் வந்தது. அவன் இலையின் முன் சாதத்தோடு உட்கார்ந்திருப்பது போலவும், முதலாளி, சாதத்தை எடுத்து வாயில் வைக்க விடாமல் அவனுடைய கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வது போலவும், நான் சாதம் இருந்த இலையை அப்பால் எடுத்து விடுவது போலவும் என் மனக் கண்முன் தோன்றியது. என் மேனி முழுவதும் ஒரு தடவை 'ஜில்'லிட்டு விட்டது. "அதற்கென்ன, ஆகட்டும். ஆனாலும் இந்தப் பணம் எனக்கு வேண்டாம்; எடுத்துக்கொண்டு போங்கள்!" என்று சொல்லி, வந்தவர்களை வழிகூட்டி அனுப்பினேன். அவர்களும் ரூபாயை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

'கேஸ்' விசாரிக்கும் தினம். பிரதிவாதியான தேவன் பக்கம் நான் சாட்சியம் கூறினேன். உண்மை கடைத் தெருவில் விலையாகாது என்பார்கள். கோர்ட்டிலும் அப்படித்தானோ என்னமோ!

கோர்ட்டு 'டிகிரி' யாகித் தேவனுடைய வண்டி மாடுகள், தானியம் எல்லாம் ஜப்தி செய்யப்பட்டு விட்டன. தேவன் மூட்டையைக் கட்டிக்கொண்டு புறப்பட்டான். போகும்போது என் வீட்டிற்கு வந்து, "சாமி! தெய்வம் உண்டா?" என்று கண்ணீரும் கம்பலையுமாகக் கேட்டான்.

"தெய்வம் கோயிலில் இல்லை; மனிதர்களின் இருதயத்தில் இருக்கிறது" என்றாள் அம்மா.

"அம்மாவின் இருதயத்தில் வேண்டுமானால் தெய்வத்தைக் காண முடியும்; அந்த ஈவிரக்கமற்ற நாயுடுவின் ஹிருதயத்தில்......?"

அம்மா அதற்கும் பதில் சொன்னாள்: "ஏன், சேகர்! எத்தனையோ கோயில்கள் பாழடைந்து கிடக்கவில்லையா!" என்றாள்.

"எந்த ஊருக்குப் போகிறாய்?" என்று நான் சப்பையத் தேவனைக் கேட்டேன்.

"மதுரை மில்லில் வேலை செய்யப் போகிறேன்!" என்று சொல்லி, அவன் அம்மாவுக்கு நமஸ்காரம் செய்துவிட்டுப் போய் விட்டான்.

6

பத்து வருஷங்கள் ஓடி மறைந்தன. அப்போது மதுரையில் நடந்து வந்த ஒரு பத்திரிகைக் காரியாலயத்தில் நான் உதவி ஆசிரியராக இருந்தேன்.

ஒரு நாள் "புறப்பட்டு வரவும்; மிகவும் அவசரம்" என்று எனக்குத் தந்தி வந்தது.

யார் அனுப்பி யிருக்கிறார்கள் என்று பார்த்தேன். ஒரே ஆச்சரியமா யிருந்தது.

பத்து வருஷங்களுக்கு முன் நான் எந்த வீட்டிலிருந்து மன வருத்தத்துடன் வெளியே வந்தேனோ, யாருக்கு விரோதமாக நான் கோர்ட்டில் சாட்சி சொன்னேனோ — அந்தப் பெரிய மனிதரின் வீட்டிற்குள் நான் பத்து வருஷங்களுக்குப் பிறகு நுழைந்தபோது என் உடம்பெல்லாம் சிலிர்த்தது. ஏதோ நோயுற்றுக் கட்டிலில் படுத்திருந்த நாயுடு என்னைக் கண்டதும், "சேகர்! என்னை மன்னிப்பாயா?" என்று கேட்டார்.

"தங்களை மன்னிக்க நான் யார்?" என்று கேட்டுக் கொண்டே, நான் அவருடைய கட்டிலுக்கு அருகே உட்கார்ந்தேன்.

"சேகர்! எனக்கு முடிவுகாலம் நெருங்கி விட்டது. என்னுடைய மரணத்துக்காக மனமிரங்கிக் கண்ணீர் விடுபவர் யாரும் இந்த ஊரில் இருக்க மாட்டார்கள். உலகில் எங்கு நோக்கினும் பேராசையும் மோசடியும் கொள்ளையும் மலிந்திருக்கிறது. இந்த வார்த்தைகள் என் வாயிலிருந்து வருவதைக் கண்டு நீ ஏளனம் செய்யலாம். அதெல்லாம் அந்தக் காலம், சேகர்! இப்போது, நாம் உயிர் வாழ்வதற்கு வேர் எவ்வளவு அவசியமோ. அப்படியே மனிதன் உயிர் வாழ்வதற்குச் சத்தியம் அவசியம் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். இந்த மோசமான உலகத்தில் தர்மத்திற்குப் பணிபவனும், நியாயத்திற்குத் தலை வணங்குபவனும், சத்தியத்தின் எல்லைக் கோட்டைத் தாண்டாதவனுமான ஒரு மனிதன் என்னுடைய சொத்தை நிர்வகித்து, எனது ஏக புத்திரன் உரிய வயதை அடைந்தவுடன் அவனிடம் ஒப்படைக்க வேண்டுமென்று எண்ணினேன். அதற்கு உன்னைத் தவிர நான் வேறு யாரைத் தேர்ந்தெடுக்க முடியும்? — என்னுடைய மனமாற்றத்திற்குக் காரணமான நீயே எனக்குக் கடவுள், சேகர்!" என்றார் அவர்.

"ஐயோ! கடவுளை இப்படி யெல்லாம் இழிவு படுத்தாதீர்கள்!" என்றேன் நான்.

"என்ன சேகர், எவன் பிறர் பொருளுக்கு ஆசைப்படாமலிருப்பானோ, எவன் ஏழைகளுக்கு இரங்கிக் கண்ணீர் விடுவானோ, எவன் பிறருக்கு மனத்திலும் தீங்கு நினையாமலிருப்பானோ அவனே தேவனில்லையா?"

இந்தச் சமயத்தில் அம்மாவின் வார்த்தைகள் என் ஞாபகத்திற்கு வந்தன.

"தெய்வம் கோயிலில் இல்லை; மனிதர்களுடைய இருதயத்தில் இருக்கிறது."

அவ்வளவுதான்; நான் அவருடைய அன்புக்கு அடிமையானேன். அன்றைய தினமே அவருடைய இரும்புப் பெட்டிச் சாவி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒரு வருட காலம் அவர் காலனுடன் போராடினார். நானும் அவருக்கு வேண்டிய உதவி செய்து வந்தேன். நாளடைவில் அவரைப் பிடித்த நோய் பலவீனப் பட்டுக் கொண்டே வந்தது. கடைசியில் காலனும் அவரைக் கைவிட்டு விட்டுப் போயே போய் விட்டான்.

* * *

ஒரு நாள், "நீ பெரிய விஞ்ஞானி!" என்றார் நாயுடு.

"ஏன்?" என்றேன்.

"இறந்த மனிதனுக்கு உயிரூட்டி விட்டாய் அல்லவா?" என்றார் அவர்.

நான் சிரித்துக் கொண்டே, "அதிருக்கட்டும்; இப்பொழுது நம்முடைய வீடு எப்படி?" என்று கேட்டேன்.

"வந்தவர் போனவர் யாவருக்கும்—அந்த
வள்ளல் இல்லம் விருந்தான தம்மா!"

என்று ஆனந்தமாய்ப் பாடினார் நாயுடுகாரு.

பட்டுப் புடவை

காலம்: மாலை 6 மணி இடம்: கபாலீஸ்வரர் ஆலயம்

★

வசந்தா:—என்னடி—சுசீலா! பார்த்தும் பார்க்காததுபோலே போயிண்டு இருக்கே. புது பட்டுப் புடவையைப் பார்த்து விசாரிக்கவில்லை என்று கோபமா?

சுசீலா:—வசந்தாவா? நீ விசாரிக்காததினாலே இந்த வாழைப்பூ கொட்டடி பட்டுக்கு மதிப்பு ஒன்றும் குறைந்து போகவில்லை. பார்த்துக் கோவேன் — சொன்னா வருத்தப்பட்டுப்பே. இந்தக் கோவில்லே, எல்லாரும் இப்பேர்ப்பட்ட பட்டுப் புடவை இந்தமாதிரி நூதன டிஸைனில் சரசமான விலைக்கு எங்கே வாங்கினேள் என்று கேட்காதவர்களே கிடையாது! முன்னேயே எங்கேயாவது சொல்லி வரவழித்தீர்களா என்று கேட்கிறா. எல்லாரும் தீபாவளிக்குக்கூட அங்குதான் வாங்கப் போகிறதா நிச்சயம் பண்ணிப்பிட்டா!

வசந்தா:—அது சரிதான். எந்தக் கடையில் வாங்கினே? சொல்லு.

சுசீலா:—அதான். வடக்கு மாடவீதியிலே பட்டு ஜவுளிகளில் பிரசித்தி பெற்ற எம். நடேசய்யர் & கோ'வில் தான் வாங்கினேன். பொரந்தாத்துக்குக் கூட அனுப்புவதற்காக எங்க ஆத்திலே சொல்லியிருக்கிறார்.

வசந்தா:—அதுதான் நானும் பார்த்தேன். ஒரு மணி நேரமா அம்மன் சன்னதி வாசல்லே உனக்காக கார்த்துண்டு இருந்தேன். நேரே உன்னை அழைச்சிண்டு அங்கே போய் எப்படியாவது வாங்கிண்டு வந்துடணும்னு! உனக்குத்தான் இந்த புடவை விஷயமெல்லாம் தெரியும்.

சுசீலா:—என்ன விஷயம் தெரியணுமாம் இதற்கு? பேசாமே என்னோடவா! விதவிதமான புடவைகள் மலையாட்டம் குவிஞ்சிருக்கு. உனக்குப் பிடித்ததை பொறுக்கிக்கோ. சாயம் போகுமோ நீடிக்க உழைக்காதோ என்ற விசாரமே வேண்டாம். அவ்வளவு நாணயமான கடை அது. வா போகலாம்.

பிறகு இருவரும் புறப்பட்டு 9, வடக்கு மாடவீதி எம். நடேசய்யர் & கோவிற்கு சென்று மனதுக்கு உகந்த ஜவுளிகளை வாங்கிக் கொண்டு சந்தோஷமாக வீடு சென்றார்கள்.

N. B:—இந்தப் பட்டுப் புடவையைப் பார்த்தபின் வசந்தாவின் புருஷன் யாதொரு கேள்வியும் கேட்கவில்லையாம்.

★

அவநம்பிக்கை

கி. ரங்கராஜன்

செங்கற்பட்டு ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் வண்டி வந்து நின்று அரைமணிக்கு மேலாகி விட்டது. அரை மணி ஆனால் என்ன, முக்கால் மணி ஆனால் என்ன? இரண்டாவது மணியும் அடித்து, 'கார்டு' பச்சைக் கொடி காட்டி வண்டி புறப்படுகிற சமயத்திலும் யாராவது ஏறத்தானே செய்வார்கள்? அதுபோல அன்றைக்கு ஒரு வாலிபனும், ஒரு யுவதியும் அவசர அவசரமாக வந்து வண்டிக்குள் ஏறினார்கள்.

"நல்ல வேளை! இன்னும் இரண்டு நிமிஷம் வீட்டில் தாமதித்திருந்தால் வண்டி புறப்பட்டிருக்கும்!" என்று சொல்லிக்கொண்டே சட்டைப் பையி லிருந்த கைக் குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான் அந்த யுவன். வேர்வை அடங்கி சிறிது நேரத்திற்கெல்லாம் சௌகரியமான இடம் ஒன்றைத் தேர்ந்து அதில் உட்கார்ந்து கொண்டார்கள் அவ்விருவரும்.

எங்கோ கனவு லோகத்திலிருந்த சங்கரன் சற்று நிமிர்ந்து பார்த்தான். எதிர்த்த 'ஸீட்'டில் வீற்றிருந்த அந்த இளம் தம்பதிகளைப் பார்த்ததும் ஒரு கணம் அவன் திகைத்துப் போய் விட்டான். அத்தகைய அழகு வாய்ந்த தம்பதிகளை அதற்கு முன் அவன் எங்கும் பார்த்ததில்லை.

"நம்பியைக் காண நங்கைக்கு
ஓர் ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந்தோறும்
குரிசிற்கும் அன்னதேயாம்"

என்று கவி கூறியது அங்கு உட்கார்ந்திருந்த அந்த அபூர்வத் தம்பதிகளுக்கும் பொருந்தும் என்று அவன் கருதினான். இவ்வாறு பிரம்ம சிருஷ்டியின் அமைப்பைப் பற்றி அவன் நீண்ட நேரம் யோசித்துக் கொண்டிருந்தபோது, தனக்கு ஏற்பட்டுள்ள தாம்பத்ய வாழ்க்கையில் அவன் மனம் ஒன்றியது.

* * *

சங்கரன், மாயவரத்தில் பெரிய மிராசுதார் நாகநாதய்யர் — கேள்விப் பட்டிருப்பீர்களே, — அவருடைய புதல்வன். மூன்று வருஷங்களுக்கு முன் அவன் தாயார் நோய்வாய்ப் பட்டிருந்தாள். தான் இறக்குமுன் தன் மகன் சங்கரனுக்குக் கல்யாணம் ஆகிப் பார்த்து விட வேண்டும் என்று விரும்பினாள் அந்த அம்மாள். அவள் விருப்பம் என்னமோ சகஜந்தான். ஆனால், அவனுக்கு வாய்த்த மாட்டுப் பெண் மட்டும் சங்கரனுக்கு உகந்தவளாக இல்லை. ஐயாயிரம் ரூபாய் வரதக்ஷிணை வந்ததால், பெண் எப்படியிருந்தாலும் பாதகம் இல்லை என்று நாகநாதய்யர் அந்தப் பெண்ணைத் தம் மகனுக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்டார்.

சங்கரன் கிரகஸ்த தர்மத்தை ஏற்றுக் கொண்ட சில மாதங்களுக்குள், அவன் தாயார் கண்ணை மூடி விட்டாள்.

சங்கரனுக்குப் பொறுக்க முடியாத வேதனையாக இருந்தது. தான் பிரம்மசாரியாக இருந்திருந்தால் உலகம் கவிழ்ந்தா போய்விடும்? இல்லை, கூவம் நதியில் சென்னைப் பட்டணமே முழுகியா போயிருக்கும்? என்ன ஆனாலும் சரி, அந்த அவலட்சணத்துடன் சேர்ந்து வாழ்க்கை நடத்துவதென்பது இயலாத காரியம் என்றுதான் முதலில் நினைத்தான். மறு நிமிஷம் அவனது மனம் வேறு விதத்தில் திரும்பி விட்டது. "சேச்சே! அப்பா பண்ணின தவறுதலுக்கு அந்தப் பெண் என்ன செய்யும்? அதன் வாழ்நாளைப் பாழாக்க நமக்கு என்ன உரிமை இருக்கிறது? நம்முடைய தலைவிதி அப்படி யிருந்தால், அனுபவித்துத்தானே தீரவேண்டும்?" என்று நினைத்தான்.

எப்படியோ மூன்று வருஷங்கள் ஓடி விட்டன. படிப்பு முடிந்ததும் அழைத்துக் கொள்ளுவதாக எழுதி யிருந்ததால் அவன் மனைவி பிறந்தகத்திலேயே இருந்தாள்.

சென்னையில் பரீட்சை எழுதிவிட்டுத் தகப்பனாரைப் பார்க்க மாயவரம் போன போதுதான், மேலே சொன்ன பிரகாரம் செங்கற்பட்டில் அந்த அழகிய தம்பதிகளை அவன் காண நேர்ந்தது.

சீகாழி ஸ்டேஷன் வந்தது. அந்த அபூர்வத் தம்பதிகள் இருவரும் இறங்கிப் போய்விட்டார்கள். அவர்கள் போன பிறகும், அந்தப் பெண்ணின் கண்கள் மட்டும் சங்கரனின் எதிரில் தோன்றிக் கொண்டிருந்தன. கடைசியாக மாயவரம் வந்தது. கொலைக் களத்துக்குச் செல்லும் கைதிபோல் தன் தகப்பனார் வீட்டை அடைந்தான் சங்கரன்.

தகப்பனார் தம் பிள்ளையிடம் அதிகமாகப் பேச்சு வைத்துக் கொள்ளவில்லை. கலகலப்பாயுமில்லை. "பரீட்சைப் பேப்பர் எழுதினாயா? எப்பொழுது சென்னையிலிருந்து புறப்பட்டாய்? உள்ளே போய்க் காப்பி சாப்பிடு!" என்று சொல்லிக் கொண்டே அங்கவஸ்திரத்தை உதறிப் போட்டுக் கொண்டு வெளியே போய்விட்டார்.

தகப்பனாருடைய இந்தச் செய்கை அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. எப்பொழுதும் தன்னிடம் அன்பாகப் பேசும் தகப்பனார், இரண்டு வருஷம் கழித்துப் பார்க்கிறார், அலட்சியமாக, ஏதோ இரண்டு வார்த்தை பேசி விட்டுப் போகிறாரே!—அவனுக்கு அது மர்மமாக இருந்தது.

* * *

ஒரு வாரம் சென்றது. தகப்பனார் மறு விவாகம் செய்து கொள்ளப் பிரயத்தனம் செய்கிறார் என்று பராபரியாக அவன் காதில் விழுந்தது. அதற்கேற்ப அவரது நடவடிக்கைகளிலும் சில புது மாறுதல்களைக் கண்டான்.

ஒரு நாள் இரவு நாகநாதய்யர் வெகு நேரம் கழித்து வீட்டுக்கு வந்தார். மாடி வராந்தாவில் படுத்துக் கொண்டிருந்த சங்கரன், கீழே தகப்பனாரும், வேறு யாரோ ஒருவரும் பேசிக்கொண்டு வருவதைக் கேட்டான். உடனே வேகமாகப் போய்க் கதவைத் திறந்தான்.

"அப்பா! எங்கிருந்து இவ்வளவுக்கா போயிருக்கிறீர்கள்? இராத்திரி இந்நேரம் வரை கண் விழித்தால் உங்கள் உடம்புக்கு ஆகுமா? போகும்போது பாலைக்கூடச் சாப்பிடவில்லை போலிருக்கிறதே! பூனை பால் செம்பைக் கொட்டிவிட்டது. நாழிகையாகிறது, படுத்துக் கொள்ளுங்கள்!" என்று அன்பொழுகக் கூறி விட்டு மாடிக்குப் போனான்.

நாகநாதய்யர் உள்ளத்தில் ஒரு சலனம் ஏற்பட்டது. தனக்கு இத்தகைய அருங்குணமுள்ள வயது வந்த பிள்ளை இருக்கும்போது தான் மீண்டும் விவாகம் செய்து கொள்ளுவது நியாயமா?—என்று நினைத்தார்.

இதைக் குறிப்பால் அறிந்த நாகு தர்மராஜ தீக்ஷிதர், "பிள்ளையாண்டான் உங்களைக் கண்டிக்கிறான்! பூனை பாலைக் கொட்டிவிட்டது என்கிறானே, கட்டின மனைவியாயிருந்தால் இப்படிச் சொல்லுவாளா? சொன்னாலும் நீங்கள் தான் சும்மா விடுவீர்களா? ஏதோ வந்தான், அதிகாரம் பண்ணினான், மாடிக்குப் போய்விட்டான்! வரத்தான் வந்தானே, நீங்கள் உடுப்புக்களைக் களையும் வரையாவது கூட இருந்தானா? உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டானா? மறுவிவாகம் செய்து கொண்டீர்களோ பிழைத்தீர்கள்! இல்லையேல் நாகத்துக்குப் பறக்க வேண்டியதுதான்!"




என்று மேலே மேலே பேசிக் கொண்டே போனார்.

நாகநாதய்யர் மனம் பழையபடி தம் மகனிடம் அவநம்பிக்கை கொள்ள ஆரம்பித்து விட்டது. "சரி, விடும்; நாழிகை ஆகிறது! நாளைக் காலை வந்து சேரும்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போய் விட்டார்.

இவர்கள் சம்பாஷணையை ஒன்று விடாமல் கேட்டுக் கொண்டிருந்த சங்கரனுக்கு விஷயம் ஒரு விதமாகப் புரிந்தது. இவ்வளவு வயதானபின் தன் தகப்பனார் மறுவிவாகம் செய்து கொள்ள முயலுகிறார் என்று நினைக்கும்போது அவன் சற்று உள்ளம் வெதும்பினான். ஆனாலும் என்ன செய்வது? அந்தப் பாழாய்ப் போன தர்மராஜ தீக்ஷிதன் எத்தனை குடியைக் கெடுக்கப் போகிறானோ? முன்னே அவன்தானே தன்னுடைய விவாகத்தையும் முடித்து வைத்தான்!

*　　　*　　　*

ஒரு நாள் — சித்திரை மாதம் — காலையில் நாகநாதய்யர் ஆடம்பரமாகத் தம்மை அலங்காரம் செய்துகொண்டு, தம் மகனைக் கூப்பிட்டு, "சங்கரா, நான் அவசர காரியமாகச் சீகாழிவரை போகவேண்டியிருக்கிறது. வருவதற்கு நாலைந்து தினங்களாகும். வீட்டைக் கவனித்துக் கொள். திறந்து போட்டு விட்டு எங்கேயாவது போய் விடாதே!" என்று எச்சரித்தவண்ணம் வண்டியில் ஏறிக் கொண்டு போய் விட்டார்.

ஒரு வாரம் சென்றிருக்கும். வாசலில் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து சங்கரனுடைய தகப்பனாரும், அன்று செங்கற்பட்டு ரயில்வே ஸ்டேஷனில் அவன் பார்த்த அந்த யுவனும் யுவதியும் வந்து இறங்கினார்கள்

அந்த யுவன் சங்கரனைத் தெரிந்து கொண்டு, "உங்களை இதற்கு முன் பார்த்திருக்கிறேன் அல்லவா?—செங்கற்பட்டு ஸ்டேஷனில் என்று நினைக்கிறேன். நீங்கள்......"

"நான் நாகநாதய்யருடைய மகன். உங்களை மறுபடியும் சந்தித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்!"

"ஓ! அப்படியா?—ஐயருடன் உள்ளே சென்றவள் என் தங்கைதான்!—நீங்கள் என் கல்யாணத்துக்கு வரவில்லை?" என்று கேட்டான் அந்த யுவன்.

"உங்கள் சகோதரியா! எப்பொழுது கல்யாணம் நடந்தது?".

"ஆம், என் சகோதரிதான்; உங்கள் சிற்றன்னை!"

அதற்கு மேல் சங்கரனுக்குப் பேச நா எழவில்லை. அவனுக்குத் தலை சுற்றியது. அப்படியே சிறிது நேரம் அயர்ந்து உட்கார்ந்து விட்டான்.



நோயாளி:—வைத்தியர் ஐயா! எனக்கு வயிற்றை எரிகிறது; மயக்கம் வருகிறது; தலை சுற்றுகிறது; கை கால்களெல்லாம் விட்டுப் போகிறது; நடக்க முடியவில்லை............!

வைத்தியர்:— இவ்வளவுதானே! உம்முடைய உடம்பில் அரிசிச் சத்து இல்லை. நான் மூன்று வேளைக்கு அரிசிச் சூரணம் தருகிறேன், சாப்பிடுங்கள், சரியாய்ப் போய்விடும்!

—எஸ். கண்ணன்.


பம்பாயில் சங்கீத மழை!

★

பம்பாய் ஷண்முகானந்தா பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டியின் ஆதரவில், சென்ற ஞாயிற்றுக்கிழமை (22—9—46) புல்லாங்குழல் வித்வான் ஸ்ரீ டி. கே. ராதாகிருஷ்ணன் அவர்களின் கச்சேரி மிகவும் விமரிசையாக நடைபெற்றது. அன்று அவர் வாசித்த ஆரபி, சங்கராபரணம், கேதாரகௌளம், ஹம்ஸாநந்தி முதலிய ராகங்கள் மிகவும் அழகாக இருந்தன. அவர் எடுத்துக்கொண்ட காம்போதி ராகம், தானம், பல்லவி மேற்குறிப்பிட்ட ராகங்களுக்குச் சிகரமாக விளங்கிற்று. ஸ்ரீ கோவிந்தசாமி நாயகர் வயலினும், ராமநாதபுரம் ஸ்ரீ சுப்பரமய்யர் மிருதங்கமும் சேர்ந்து அன்றைய கச்சேரி ஒரு நக்ஷத்திரக் கச்சேரியாகவே அமைந்துவிட்டது. வான மழை நின்றதும் பம்பாய் வாசிகளுக்குச் சங்கீத மழை பொழிந்த மேற்படி வித்வான்களுக்கு எங்கள் மனமார்ந்த ஆசிமொழிகளைச் செலுத்துகிறோம்.

—கோவைக் கர்ப்பதீர்.


வைடமின் 'பி'
உங்கள் ஜீவசக்தியை அதிகரிக்கும்
இதற்குமுன் இருந்திராத வகையில் நெஸ்லிஸ் மால்டெட் மில்க் தேக ஆரோக்கியத்தை வளர்க்கக் கூடியதாயிருக்கிறது. அதில் வைடமின் 'பி' அதிகமாயிருப்பதால் அது ஒரு ருசிகரமான பானம் மாத்திரமல்ல. தேகத்தை வளர்க்கும் ஒரு டானிக்காகும். தினந்தோறும் போதிய அளவு வைடமின் 'பி'ஐ உட்கொள்ளாவிட்டால் தேகாரோக்கியம் க்ஷீணித்து வீர்யம் குறையும்.
நெஸ்லிஸ் மால்டெட் மில்க்
அதிக வைடமின் 'பி'யுடன் கூடியது
NESTLE'S
THE PERFECT
MALTED MILK



யசோதரா

ஆசிரியர்: விச்வம்பரநாத் கௌசிக்
மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

பூர்வ கதை: பிச்சைக்காரனான நந்தராம் தன் மகள் யசோதராவுடன் ஒரு நாள் வக்கீல் சோமநாத பாபுவின் வீட்டிற்கு வருகிறான். அவருடைய குமாரரான ராமநாத பாபு, யசோதராவிடம் தன் உள்ளத்தைப் பறி கொடுத்து விடுகிறார். இதன் காரணமாக நந்துவுக்குச் சோமநாத பாபுவின் வீட்டிலேயே வேலை கிடைக்கிறது. ராமநாத பாபுவின் உள்ளத்தில் இடம் பெற்ற யசோதரா, அவருடைய தங்கையான சம்பாவதியின் உள்ளத்திலும் இடம் பெறுகிறாள். தனக்கும் யசோதராவுக்கு மிடையே தோன்றிய காதலைப் பற்றி, ஒரு நாள் ராமநாத பாபு தன்னுடைய நண்பரான விரஜகிசோரிடம் விவரிக்கிறார். அவர் நந்துவைக் கூப்பிட்டு, அவன் பிச்சைக்காரனான கதையைக் கேட்கிறார். நந்து, தான் சந்திரபுரத்து ஜமீன்தார் மகன் என்றும், தான் காதலித்த லோரா என்ற பெண்ணைத் தனக்குக் கல்யாணம் செய்து வைக்கப் பெற்றோர் சம்மதிக்காமற் போகவே, அவளை யாருக்கும் தெரியாமல் தான் அழைத்துக்கொண்டு ஓடி வந்து விட்டதாகவும், அவள் யசோதராவைப் பெற்ற ஐந்து வருடங்களுக்குப் பிறகு கண்ணை மூடிவிடவே, மீண்டும் சந்திரபுரத்துக்குப் போக மனமின்றித் தான் பிச்சைக்காரனாக மாறிவிட்டதாகவும் சொல்கிறான். அவனிடம் இரக்கம் கொண்ட ராமநாத பாபு, அவனை மீண்டும் சந்திரபுரத்துக்கு அனுப்பிவிட முயற்சி செய்கிறார். ஆனால், அதே சமயத்தில் யசோதராவைப் பிரிந்து எப்படி உயிர் வாழ முடியும் என்றும் வருந்துகிறார். கடைசியில் நந்துவின் நண்பனான மனோஹரின் மூலம் ஜமீன்தார் அர்ஜுன் சிங்குக்குத் தம் பிள்ளையைப் பற்றிய செய்தி எட்டுகிறது. உடனே அவர் தம் மனைவியுடன் புறப்பட்டு வந்து நந்துவையும் யசோதராவையும் அழைத்துக்கொண்டு போய் விடுகிறார். கண்ணீரும் கம்பலையுமுடன் யசோதரா, ராமநாத பாபுவை விட்டுப் பிரிகிறாள்—மேலே படியுங்கள்.

15

யசோதரா ஊருக்குப் போய் மூன்று மாதங்கள் ஆனபிறகு, ராமநாத பாபு எம்.ஏ.யும் எல்.எல்.பி.யும் படிப்பதற்காக அலகாபாத் சென்று விட்டார். அங்கே சென்று படிப்பில் மூழ்கிய பிறகும்கூட அவரால் யசோதராவை மறக்க முடியவில்லை. அவளை மறக்க எவ்வளவோ முயன்று பார்த்தார். ஆனால் அவருக்கு வெற்றி கிட்டவில்லை. இவ்விதம் ஆறு மாதங்கள் ஓடிவிட்டன.

ஒரு நாள் காலையில் அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அது கான்பூருக்குச் சென்று, பிறகு அங்கிருந்து திரும்பி வந்திருந்தது. ராமநாத பாபு கடிதத்தைப் பிரித்துப் படித்தார். அதில் எழுதியிருந்ததாவது:

"ஸ்ரீமான் ராமநாத பாபு அவர்களுக்கு, சந்திரபுரத்திலிருக்கும் அடியேன் நந்தராம் வணக்கத்துடன் எழுதிக்கொண்டது:—

இங்கு எல்லோரும் சுகம். அங்கும் எல்லோரும் சுகமாயிருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஒரு தடவை இங்கு வருவதாகத் தாங்கள் சொல்லியிருந்தீர்கள். ஆனால் இது வரை வரவில்லை. என்ன காரணம் என்றும் விளங்கவில்லை. என்னை மறந்துவிட்டீர்களா? அடியேனைத் தாங்கள் மறக்க மாட்டீர்கள் என்றே நம்புகிறேன். கட்டாயம் ஒரு தடவை நீங்கள் இங்கு வரவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். ஜஸ்ஸோ எப்பொழுதும் உங்கள் நினைவாகவே இருக்கிறாள். சம்பாவதியிடமிருந்து அடிக்கடி ஜஸ்ஸோவுக்குக் கடிதம் வந்து கொண்டிருக்கிறது. நீங்கள் அலகாபாத்தில் இருக்கிறீர்கள் என்பதும் அவளுடைய கடிதத்தின் மூலமாகத்தான் தெரிய வந்தது. தங்களுடைய விலாசம் சரியாகத் தெரியாததனால் ஊருக்கு எழுதலானேன். அப்பாவும் உங்களை ரொம்ப விசாரித்தார். அவரும் ஒரு தடவை இங்கு வந்து போக வேண்டும் என்று எழுதச் சொன்னார். தாங்கள் என்றைக்கு, எந்த வண்டியில் வருகிறீர்கள் என்று தெரி

வித்தீர்களானால் ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்பி வைக்கச் சௌகரியமாயிருக்கும்."

கடிதத்தைப் படித்து முடித்த பிறகு ராமநாத பாபுவுக்கு "ஜுஸ்லோ எப்பொழுதும் உங்கள் நினைவாகவே இருக்கிறாள்" என்ற வாக்கியம் அடிக்கடி ஞாபகம் வந்து கொண்டிருந்தது. கடிதம் வருவதற்கு முன்பே எத்தனையோ தடவை யசோதாராவைப் பார்க்கப் போக வேண்டும் என்ற ஆவல் அவர் மனத்தில் எழுந்ததுண்டு. ஆனால் இத்தனை நாளும் அந்த ஆவலை மனதிற்குள்ளேயே அவர் அடக்க முயன்றார். இன்று கடிதத்தைப் பார்த்ததும் — குறிப்பாக — அந்த ஒரு வாக்கியத்தைப் படித்ததும் அவரது உள்ளத்தில் அடங்கியிருந்த ஆவல் தலை தூக்கிற்று. 'ஜுஸ்லோ எப்பொழுதும் உங்கள் நினைவாகவே இருக்கிறாள்' என்றால் 'அவள் உங்களைப் பார்க்க விரும்புகிறாள்' என்றுதானே அர்த்தம்! — இதை நினைத்ததும் அவருடைய ஆவல் இன்னும் பன் மடங்கு அதிகரித்தது. அவர் தன் ஆவல்களை அடக்கவோ, ஆசையை ஒடுக்கவோ தயாராயிருந்தார். ஆனால் யசோதாராவின் விருப்பத்திற்குப் பங்கம் விளைவிப்பதற்கு மட்டும் அவர் விரும்பவில்லை. அவசியம் போய்த்தான் ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். "பாவம், அவளுக்கு வெளியில் தன்னைத் தனியாகப் புறப்பட்டு வர உரிமை கிடையாது; நமக்கு உண்டு. இது நம் கடமை" என்று அவர் நினைத்தார்.

ராமநாதபாபு இதே யோசனையில் ஆழ்ந்து இரவு வெகு நேரம் வரை கண் விழித்திருந்தார். காலையில் எழுந்ததும் தன் தோழர் ராமச்சந்திர சர்மா என்பவரிடம், "அடுத்த வாரம் மூன்று நாள் லீவு இருக்கிறதே, ஏதாவது ஒரு கிராமத்துக்குப் போய் வந்தால் என்ன?" என்று கேட்டார்.

"கிராமத்திற்கா? எதற்காக?" என்றார் ராமச்சந்திர சர்மா.

"சும்மாத்தான். கிராமத்தின் இயற்கை அழகைப் பார்க்கக் கொடுத்து வைக்க வேண்டுமே! இந்த வசந்த காலத்தில் என்ன அழகாயிருக்கும் தெரியுமா?"

"போவோமே, ஆனால் ஒரே ஒரு விஷயம்......."

"என்ன?"

"எனக்கு அங்கே வேட்டையாட சௌகரியம் செய்து தரவேண்டும்."

"பூ, இவ்வளவுதானே! அதற்கென்ன குறைச்சல் அங்கே? உன்னிடம் துப்பாக்கி இல்லா விட்டாலும் பாதகமில்லை. நான் அங்கேயே வாங்கித் தருகிறேன்."



"துப்பாக்கி என்னிடம் இருக்கிறது. இன்னொரு சிநேகிதனையும் அழைத்துக் கொண்டு வரலாமோ இல்லையோ!"

"பேஷாய்!"

"எந்தக் கிராமத்துக்குப் போவதாக உத்தேசம்?"

"சந்திரபுரம் என்று ஒரு கிராமம் இருக்கிறது. அந்த ஊர் ஜமீன்தார் எனக்கு ரொம்ப வேண்டியவர்."

"அப்படியா! ரொம்ப சௌகரியமாய்ப் போச்சு. இங்கே இருந்து அந்த ஊர் எவ்வளவு தூரம் இருக்கும்?"

"ரொம்பக் கிட்டத்தான். மூன்று ஸ்டேஷனோ, நாலு ஸ்டேஷனோதான் இருக்கிறது. வெள்ளிக்கிழமை சாயந்திர வண்டியிலே போனோமானால் சனி, ஞாயிறு, திங்கள் மூன்று நாளும் அங்கேயே தங்கி விட்டுச் செவ்வாய்க் கிழமை காலையில் திரும்பி வந்துவிடலாம். என்ன, சரி தானே?"

"ரொம்ப சரி; இன்றே ஜமீன்தாருக்கு 'லெட்டர்' எழுதிவிடு!"

'வண்டியும் அனுப்பச் சொல்லி எழுதி விடுகிறேன். வெள்ளிக்கிழமை!—ஞாபகம் வைத்துக் கொள். மறந்து விடாதே!" என்றார் ராமநாத பாபு.

16

வெள்ளிக்கிழமை மாலை நாலரை மணி வண்டியில் ராமநாத பாபு தனது இரு சிநேகிதர்களுடன் சந்திரபுரத்துக்குப் புறப்பட்டார். ஆறு மணிக்கு வண்டி குறிப்பிட்ட ஸ்டேஷனை அடைந்தது. நந்தராமே அழைத்துப் போவதற்காக மேற்கத்தி மாடுகள் பூட்டப்பட்ட இரண்டு பெட்டி வண்டிகளுடன் ஸ்டேஷனுக்கு வந்திருந்தான். வண்டிகள் இவர்களை எதிர்பார்த்த வண்ணம் விளக்குகள் பொருத்தப்பட்டுத் தயாராக நின்று கொண்டிருந்தன. ராமநாத பாபுவைக் கண்டதும், நந்தராம் அவருடைய காலில் விழுந்து வணங்கப் போனான். ராமநாத பாபு அவனைத் தடுத்து, "இதென்ன நந்தராம், நீ செய்வது எனக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை" என்றார்.

நந்தராம் கையைக் கூப்பிக் கொண்டு, "நீங்கள் எனக்கு எஜமானர் அல்லவா?" என்றான்.

"எஜமானரா? யார் சொன்னது? அந்தக் காலம் மலையேறி எவ்வளவு நாள் ஆகிவிட்டது! நீயும் நானும் இப்பொழுது சிநேகிதர்கள் அல்லவா?" என்றார் ராமநாத பாபு.

பிறகு பக்கத்தில் நின்று கொண்டிருந்த இரண்டு நண்பர்களையும் நந்தராமுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். நந்தராம் அவர்களையும் வணங்கினான். எல்லாரும் வண்டியில் ஏறி உட்கார்ந்தனர். வண்டி சந்திரபுரத்தை நோக்கிப் புறப்பட்டது. ராமநாத பாபுவும் நந்தராமும் ஊர் விஷயங்களைப்பற்றி வழி நெடுகப் பேசிக்கொண்டே சென்றனர்.

முக்கால் மணி நேரத்திற்குள் வண்டி சந்திரபுரத்தை அடைந்து நந்தராமின் வீட்டு வாசலில் போய் நின்றது. மாடுகளின் சலங்கைச் சத்தத்தைக் கேட்ட டாகுர் அர்ஜுன் சிங் அதிதிகளை வரவேற்க வேகமாக வாயில் பக்கத்திற்கு வந்தார். வண்டியிலிருந்து இறங்கிய ராமநாத பாபுவும், அவருடைய சிநேகிதர்களும் அவரை வணங்கினர். டாகுர், ராமநாத பாபுவிடம் பிரயாணத்தைப் பற்றி விசாரிய வாறே, எல்லாரையும் உள்ளே அழைத்துச் சென்றார். எல்லோரும் ஒரு பெரிய அறையை அடைந்தனர்.

அந்த அறையின் ஒரு புறத்தில் வரிசையாக மூன்று கட்டில்கள் போடப்பட்டிருந்தன. மற்றொரு புறத்தில் ஒரு அழகிய மேஜை வைக்கப்பட்டிருந்தது. அதன் மேல் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அந்த மேஜையின் அருகிலேயே நான்கு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. தரையில் பெரிய ஜமக்காளம் விரிக்கப்பட்டிருந்தது.

அறையை அடைந்ததும் ராமநாத பாபு தனது நண்பர்களை டாகுர் அர்ஜுன் சிங்குக்கு அறிமுகம் செய்து வைத்தார். பிறகு சட்டைகளைக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டிவிட்டுக் கை கால்களைக் கழுவிக் கொண்டு எல்லோரும் அமர்ந்து பேசலாயினர். பேச்சு வாக்கில் ராமநாத பாபு, "டாகுர்ஜி, என்னுடைய இரண்டு சிநேகிதர்களுக்கும் வேட்டையாடுவது என்றால் ரொம்பப் பிரியம். அதற்காகத்தான் என்னோடு வந்திருக்கிறார்கள். அவர்கள் வேட்டைக்குப் போக ஏற்பாடு செய்ய முடியுமோ இல்லையோ?" என்று கேட்டார்.

டாகுர், "வேட்டைக்குத்தானே! இப்பொழுதே ஆட்களுக்குச் சொல்லி ஏற்பாடு செய்து விடுகிறேன். நாளைக்கு விடியற் காலையில் போகட்டுமே!" என்றார்.

"என் ராமநாத்! நீ வரப்போகிற தில்லையா?" என்று கேட்டார் ராமச்சந்திர சர்மா.

"நானு! வரமாட்டேன். எனக்கு ஜீவ ஹிம்சை என்றாலே பிடிக்காது."

"க்ஷத்திரிய குலத்திலே பிறந்து வேட்டை பிடிக்காது என்கிறாயே! நல்ல ஆள் அப்பா, நீ!"

"அவரவர்களுடைய கொள்கைகளைப் பரிகாசம் செய்ய நாம் யார்?......... அதிருக்கட்டும்; நாம் எத்தனை மணிக்குப் போவது?" என்று கேட்டார் கூட வந்திருந்த இன்னொரு நண்பரான நாதாசரண்.

"ஐந்து மணி சுமாருக்குப் புறப் படுங்கள். உங்கள் கூடவே ஒரு வண்டியும் அனுப்பி விடுகிறேன். களைத்துப் போய் விட்டால் வண்டியில் திரும்பி வந்து விட லாம், பாருங்கள்!" என்றார் டாகுர்.

இந்தச் சமயத்தில் நந்தராம் உள்ளே வந்து. "நேரமாய் விட்டதே! சாப்பிடப் போகலாமே!" என்று கூப்பிட்டான்.

"ஆமாம், ஆமாம். பேச்சிலேயே நேரம் போவது தெரியாமல் போய்விட்டது. வாருங்கள், சாப்பிடப் போவோம்" என்று அழைத்தவாறே டாகுரும் எழுந்தார்.

* * *

மூவரும் போஜன சாலைக்குச் சென்று சாப்பிட உட்கார்ந்தனர்.

"செய் எப்படி 'கம்' மென்று வாடை வீசுறது பார்த்தாயா? இந்த மாதிரி நெய் நம்ம ஊரிலே ஏது?" என்றார் நாதாசரண்.

"ரொட்டி 'பூ'ப்போல் ரொம்ப நன்றா யிருக்கிறதே! இவ்வளவு சிரமப்பட்டு யார் பிசைந்து தட்டப் போகிறார்கள்!—ஆகா!" என்றார் ராமச்சந்திர சர்மா.

"எல்லாமே ரொம்ப ருசியா யிருக் கிறது, நந்து!......உங்கள் வீட்டில் இருக் கும் சமையற்காரன் ரொம்பக் கெட்டிக் காரன் போலிருக்கிறது!" என்றார் ராமநாதபாபு.

"இன்று சமையற்காரன் சமைக்க வில்லை. ஜுன்லோதான் சமைத்தாள்!" என்றான் நந்தராம்.

"பாவம், இன்றைக்கெல்லாம் அவள் ரொம்ப சிரமப்பட்டிருப்பாள் போலிருக் கிறது!" என்றார் ராமநாத பாபு.

"சிரமம் ஒன்றுமில்லை. இன்றைக்கு அவள் சந்தோஷமா யிருந்ததுபோல் என்றைக்குமே இருந்ததில்லை. நீங்கள் வரப் போகிறீர்கள் என்று கேள்விப்பட்ட தும், அவள் ஒவ்வொரு நாளாக எண்ணிக் கொண்டே வந்தாள்!"

"சமையல் ரொம்ப நன்றாயிருக்கிறது என்று நான் சொன்னதாக அவளிடம் சொல்லு!" என்றார் ராமநாத பாபு.

"நாளைக் காலையிலேதான் நீங்களே அவளைப் பார்க்கப் போகிறீர்களே, அப் பொழுது சொல்லி விடுங்கள்!" என்றான் நந்தராம்.

"நாளைக் காலையில்தான் அவளைப் பார்க் கப் போகிறீர்களே!" என்ற வார்த்தை யைக் கேட்டதும் ராமநாத பாபுவின் உடல் மகிழ்ச்சியினால் சிலிர்த்தது.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு எல் லோரும் எழுந்தனர். தாம்பூலம் தரித்துக் கொண்டு சிறிது நேரம் பேசிக் கொண் டிருந்தனர். பிறகு பால் அருந்திவிட்டு எல்லோரும் படுத்துக் கொண்டனர்.

ராமநாத பாபுவின் நண்பர்கள் இருவரும் படுத்ததும் தூங்கி விட்டனர். ஆனால் ராம நாத பாபு மட்டும் வெகு நேரம் வரை தூங்கவில்லை.

ஏழு காரணங்கள்!



கிளப்பில் சேர்ந்திருப்பவர் (தம் நண்பரைப் பார்த்து):—நீங்கள் ஏன் கிளப்பில் சேர்ந்துகொள்ளவில்லை?

நண்பர்:—அதற்கு ஏழு காரணங்கள் இருக்கின்றன.........

கிளப்பில் சேர்ந்திருப்பவர்:—ஏழு காரணங்களா! என்னென்ன?

நண்பர்:—என்னுடைய மனைவியும், ஆறு குழந்தைகளும்!

—பி. எஸ். கிருஷ்ணஸ்வாமி.

"நாளைக்கு யசோதாராவைப் பார்க்கும் பொழுது அவளுடன் என்ன பேசுவது?" என்பதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார். "இன்றைக்கு அவள் சந்தோஷமா யிருந்ததுபோல் என்றைக்குமே இருந்த தில்லை. நீங்கள் வரப்போகிறீர்கள் என்று கேள்விப் பட்டதும் ஒவ்வொரு நாளாக எண்ணிக்கொண்டே வந்தாள்" என்று சுந்தரம் கூறிய வார்த்தைகள் அவரது மூளையின் ஒரு மூலையில் இனிமையாக ஒலித்துக் கொண்டே யிருந்தன.

அந்த வார்த்தைகளிலேயே ஒருவித இன்பம் ஊறிக் கிடப்பதுபோலத் தோன்றியது, அவருக்கு. அவரது மனம் அவ்வார்த்தைகளை உருப்போட ஆரம்பித்தது. அவரது உள்ளத்தில் யசோதாராவைக் காணவேண்டும் என்ற ஆவல் வர வர அதிகரித்தது. கடைசியில் அதே யோசனையில் லயித்து அவர் கண் அயர்ந்து விட்டார்.

17

ராமநாத பாபுவின் இரண்டு நண்பர்களும் விடியற்காலையிலேயே எழுந்து வேட்டைக்குப் போய்விட்டனர். ராமநாத பாபு காலையில் எழுந்து ஸ்நானபானங்களை முடித்துக்கொண்டு ஜமீன்தாருடன் பேசிக் கொண்டிருந்தார். மணி பதினொன்று அடித்ததும் சுந்தரம் அவரைச் சாப்பிடக் கூப்பிட்டான். அவர் சுந்தரமின் பின்னாலேயே போஜன சாலைக்குச் சென்றார். அங்கே சுந்தரமின் தாயார் உட்கார்ந்திருந்தாள். பலகை, இலை முதலியன கீழே போடப்பட்டிருந்தன. ராமநாத பாபுவைக் கண்டதும் அவள் அன்புடன் வரவேற்று க்ஷேமலாபங்களை விசாரித்தாள்.

சாப்பிட உட்கார்ந்த ராமநாத பாபு, எதிர்ப்புறத்துச் சமையலறையில் உட்கார்ந்திருந்த யசோதாராவைக் கவனித்தார். அவளுடைய உடம்பு இளைத்துத் துரும்பாகி இருந்தது. "கிராமத்தில் — ஆரோக்கியமான சூழ்நிலையில் இருக்கும்பொழுது யசோதாரா உடல் நிலை இப்படிக் கெட்டுப் போவானேன்!" என்று சிந்திக்கலானார்.

ராமநாத பாபுவைக் கண்டதும் யசோதாரா எழுந்து வந்து சிறிது நாணம் கலந்த குரலில், "பாபுஜீ சௌக்கியமா?" என்று கேட்டாள்.

"அவர் சௌக்கியந்தான்! — உன் உடம்பு என் இப்படி இளைத்து விட்டது?" என்று கேட்டார் ராமநாத பாபு.

யசோதாரா ஒன்றும் பதில் அளிக்கவில்லை. அதற்குப் பதிலாக சுந்தரமின் தாயார், "உங்கள் ஊரைவிட்டு வந்ததிலிருந்தே இப்படித்தான் இருக்கிறாள். சரியாகச் சாப்பிடுவதுகூடக் கிடையாது!" என்றாள்.

ராமநாதபாபு சாப்பிட்ட வண்ணமே, "ஏன் இப்படி?" என்று கேட்டார்.

"என்னவோ தெரியவில்லை. எப்பொழுது பார்த்தாலும் உங்கள் வீட்டு நினைவாகவே இருக்கிறாள். இங்கே அவளுக்கு இருப்புக் கொள்ளவே இல்லை."

"ஜல்லோலாவை விட்டுப் பிரிந்தது முதல் சம்பாவும் இப்படித்தான் இருக்கிறாள்!"

"இரண்டு பேரும் உயிருக்கு உயிராய் இருந்தார்களோ, இல்லையோ! அதனால் தான்!"

நடுவில், "சாப்பாடு நன்றாயிருக்கிறதோ, இல்லையோ? உப்பு-கிப்பு எல்லாம் சரியாயிருக்கிறதா?" என்று கேட்டாள் யசோதாரா.

"ரொம்ப நன்றாயிருக்கிறது. யார் சமைத்தது?" என்று தனக்கு ஒன்றும் தெரியாதவர்போல் கேட்டார் ராமநாத பாபு.

"எனக்கென்ன, நன்றா தெரிகிறது? ஜல்லோதான் சமைத்தாள். எல்லாம் உங்கள் வீட்டில் கற்றுக் கொண்டது தானே!" என்றாள் ஜமீன்தாரிணி.

"ஏன், உங்கள் கண்ணை டாக்டரிடம் காட்டுவதுதானே? எவ்வளவு நாள் தான் இப்படி சிரமப்பட்டுக் கொண்டிருப்பீர்கள்?" என்று கேட்டார் ராமநாதபாபு.

"டாக்டரிடம் காட்டினோம். நன்றாகத் தெரியாமற் போனால்தான் ஏதாவது செய்யலாம் என்று சொல்லி விட்டார்!" என்று பதிலளித்தாள் சுந்தரமின் தாயார்.

"அவர்கள் சொல்வது உண்மைதான். நன்றாகத் தெரியாமற் போனால்தான்......"

"அப்படிச் சொல்லாதே, அப்பா! தெரிகிறவரை போதும்!"

இப்படிப் பேசியவாறே ராமநாதபாபு சாப்பிட்டு முடித்தார். ஆனால், "யசோதாராவுடன் மனம் விட்டுப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லையே, அவளை நன்றாகப் பார்க்கக்கூட முடியவில்லையே, சாப்பாடு நன்றாயிருந்தாலென்ன, நன்றாயில்லாமற் போனாலென்ன!" என்று அவருடைய மனம் தன் அதிருப்தியைத் தெரிவித்தது.


"லக்ஸ் டாய்லட் சோப்பால் தினமும் நான் அழகுபடுத்திக்கொள்ளும் முறை இதுவே" என்று புஷ்பவல்லி சொல்கிறார்
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின் மேல் தடவுகிறேன்...
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்...
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினால் முகத்தை துடைக்கிறேன்
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்
LUX TOILET SOAP
உங்கள் சருமத்திற்கு ஏன் புது சோபையை அளிக்கக்கூடாது? புஷ்பவல்லியின் சுலபமான அழகுபடுத்திக்கொள்ளும் முறையை 30 நாட்கள் கையாளுங்கள்—லக்ஸ் டாய்லட் சோப்பின் சுத்தம்செய்யும் திறமையையும், குளுமை அளிக்கும் குணத்தையும் கண்டு மகிழ்வீர்கள். இதன் மணமுள்ள சுறுசுறுப்பான நுரை உங்கள் சருமத்தை மிருதுவாகவும், பட்டுப்போல் மழமழப்பாகவும் செய்கிறது. இதுவே சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகை அளிக்கும் சோப்—உங்கள் வதனத்தின் வனப்பையும் இச் சோப்பினால் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.
REG. 330-25-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

வட்ட மேஜை

சென்னை,
24—9—46

"கல்கி" ஆசிரியர் அவர்கட்கு,

பல்லாவரம் தோல் பதனிடும் தொழிலாளர்கள் சுமார் 3000 பேர் தற்போது வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர். 21—8—46ல் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் லேபர் கமிஷனர் முன்னிலையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி முதலாளிகள் நடந்து கொள்ளவில்லை. கொடுப்பதாக ஒப்புக்கொண்ட சம்பளத்தையும் பஞ்சப் படியையும் சரிவரக் கொடுக்க மறுக்கின்றனர். அதுமட்டுமின்றி தொழிற்சங்கத்தை முறியடிப்பதற்காக 'லாக்-அவுட்' ஏற்பாடும் செய்து வருகின்றனர். எந்த வகையில் முதலாளிகள் ஒப்பந்தத்தை ஒவ்வொரு நாளும் மீறுகிறார்கள் என்ற விவரத்தை 22—8—46 தேதியிலிருந்து ஒவ்வொரு நாளும் லேபர் கமிஷனர் ஆபீசுக்கும் சர்க்கார் காரியாலயத்திற்கும் சென்று நேரிடையாகவும் எழுத்து மூலமாகவும் விவரத்தைக் கொடுத்தோம். ஒப்பந்தத்தை அமுல் நடத்த வேண்டுமென்று லேபர் கமிஷனர் முதலாளிகளுக்குச் சொல்லியும் அவர்கள் அந்த யோசனையை அவமதித்தனர். லேபர் கமிஷனரின் முயற்சிகள் வீணாயின. வேறு வழியின்றி வேலை நிறுத்தம் செய்துள்ளோம். 10—9—46ல் தடையுத்தரவு பிறந்தது. தொழிலாளர் சங்க ஊழியர்களும் சேர்ந்து மொத்தம் 44 பேர் கைது செய்யப்பட்டார்கள். நாங்கள் கேட்பது அட்ஜூடிகேஷன். உடனே அட்ஜூடிகேஷன் வைத்தால் தொழிலாளிகள் வேலைக்குப் போகத் தயாராக இருக்கின்றனர். அதைச் சட்டமாகச் செய்த சர்க்காரும் தொழில் மந்திரியும் கொடுக்காமல் காலந்தாழ்த்தி நாளை, நாளை என்று ஒத்திப் போட்டுக்கொண்டே செல்லுகிறார்கள். வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்று அறிக்கைகள் விடும் மந்திரிகள் வேலை நிறுத்தம் செய்து தொழிலாளர் கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்துகிறார்கள். கட்டாயம் அட்ஜூடிகேஷன் சட்டம் ஏற்படுத்திய கனம் மந்திரி தொழிலாளிகளே அட்ஜூடிகேஷன் கேட்கும்போது அதை மறுப்பது மிகவும் விசித்திரமாயிருக்கிறது.

ஸ்ரீ. பழனி வேலாயுதம்.

பூனா
18—9—46

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

செப்டம்பர் 8-ம் தேதி கல்கி இதழில் 15-ம் பக்கத்தில் "இந்த வருஷத்தில் தமிழ்நாடெங்கும் சிறப்பாகப் பாரதி விழா கொண்டாடப்படும்" என்று எழுதியிருந்தீர்கள். தமிழ்நாட்டுக்கும் பல நூறு மைல்களுக்கு அப்பால் பூனாவில் குடியேறியிருக்கும் தமிழர்களும் பாரதி விழாவை மிகவும் விமரிசையாகக் கொண்டாடிய விஷயத்தை அறிந்து நாங்களும் கல்கி மூலமாகத் தமிழர்களும் மிகவும் சந்தோஷமடைவீர்கள் என்று நம்புகிறேன்.

தங்கள் அன்புமிக்க,

ரா. சௌரிராஜன்.

["தமிழ்நாடெங்கும்" என்று நாம் குறிப்பிட்டிருந்தது அவ்வளவு பொருத்தமில்லைதான். "தமிழர்கள் உள்ள இடங்களிலெல்லாம்" என்று எழுதியிருக்க வேண்டும். நாம் அப்படி எழுதவில்லையே என்று இருந்துவிடாமல் பூனாவில் நடந்தது போலவே மற்றும் வட நாட்டில் தமிழர்கள் உள்ள பல இடங்களிலும் சிறப்பாகப் பாரதியார் விழா நடந்தது பற்றி மகிழ்ச்சியடைகிறோம். குத்தும் கொலையும் 'கர்பியூ' உத்தரவுமாயிருக்கும் பம்பாயில்கூட நமது வ. ரா. அவர்களின் தலைமையில் பாரதி விழா சிறப்பாக நடந்திருக்கிறது என்றால், தமிழ் மக்களின் பாரதி பக்தியைப் பற்றி வேறு என்ன கூறவேண்டும்? —ஆசிரியர்.]

கொளாநல்லிப் பெரியூர்.
17—9—46

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

அடியேன் ஒரு ஏழை விவசாயி. எங்களுக்கு வந்த கஷ்டம் ஒன்றைத் தங்களிடம் தெரிவிக்கிறேன். எங்களுடைய ஊர் கோவை ஜில்லா ஈரோடு தாலுகா கொளாநல்லி கிராமத்தில் இருக்கிறது. எங்கள் ஊரிலிருந்து 25-வது மைலில் திருச்சி ஜில்லா கரூர் தாலுகாவில் புகளூரில் ஒரு வெள்ளைக்கார முதலாளியின் சர்க்கரை பாக்டரி இருக்கிறது. கரூர் தாலுகா முழுவதும் ஈரோடு தாலுகா முழுவதும் ஒருவரும் மாட்டு ஆலையிலோ அல்லது யந்திர உதவியாலோ வெல்லம் பழுப்புச் சர்க்கரை செய்யக்கூடாது. கரும்பை மில்லுக்கே கொண்டுவந்து போட வேண்டுமாம். டன் ஒன்றுக்கு 21 ரூபாய் கொடுக்கிறார்கள். சுமார் 1 ஏக்கருக்கு 30 அல்லது 35 டன் ஆகும். அதாவது 600 அல்லது 700 ரூபாய் ஆகும். விதைக் கரணை, பார் பிடிப்பு, கூலி, பிண்ணாக்கு, களைவெட்டு, கரும்பு வெட்டு, வண்டி வாடகை எல்லாம் சேர்த்தால் 600 ரூபாய் ஆகும். அதுவும் தற்சமயம் மில் ஸ்டோப் செய்திருக்கிறார்கள். ஸ்டோப் முடிய இன்னும் 3 மாதம் ஆகும். அதுவரை ஒருவரும் கரும்பை வெட்டாமல் வைத்திருக்க வேண்டும். 13, 14 மாதம் ஆன கரும்புகளை மட்டும் அவர்கள் உத்தரவின் பேரில் வெட்டி வெல்லம் செய்யலாம். ஒரு டன் கரும்பைப் பழுப்புச் சர்க்கரையோ வெல்லமோ செய்தால் 80 ரூபாய் ஆகும். அதாவது ஒரு ஏக்கருக்கு 2500 ரூபாய் வரை கிடைக்கும். ஆனால் திருச்சி - கோவை ஜில்லா கலெக்டர்கள் எங்களுக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். என்ன செய்வது? காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டும்கூட இவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாகிறோம்.

க. பெரியசாமி.

கீழ்க் கொடுங்காளூர்,
20—9—46

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

உங்கள் பத்திரிகையில் கிராமப் பள்ளிக்கூட ஆசிரியர்கள், கிராம உத்தியோகஸ்தர்கள், அன்றிவாரக் குமாஸ்தாக்கள் இவர்களுடைய சம்பளக் குறைவைப் பற்றி அடிக்கடி எழுதி வருகிறீர்கள். இவர்களோடு கூட கிராம ஆஸ்பத்திரி வைத்தியர்களும் சேர்ந்தவர்களென்று உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கிராம ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் டாக்டர்களுக்குச் சர்க்கார் வருஷத்திற்கு ரூபாய் 500 மான்யம் கொடுக்கிறார்கள். அதாவது மாதத்துக்கு ரூ. 41-10-8 கிடைக்கிறது. இது தவிர அவர்களுக்குப் பஞ்சப்படி எதுவும் கிடையாது. இந்த டாக்டர்கள் ஏழைகளுக்கு மாத்திரம் தர்ம வைத்தியம் செய்ய வேண்டும் என்றும் மாதம் 30 ரூபாய்க்குமேல் வருமானம் உள்ளவர்களிடம் வைத்திய உதவிக்கும் பணம் பெறலாமென்றும் சர்க்கார் உத்தரவு. ஆனால், உண்மையில் நடப்பது என்னவென்றால் ஒரு கிராமத்தில் பணக்காரனைத்தான் பணம் கேட்க முடிகிறதில்லை. அவருக்குப் பயந்து கொண்டு டாக்டர் இலவசமாக வைத்தியம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகையால் குக்கிராம ஆஸ்பத்திரி டாக்டர்களுக்கு மேல் வருமானம் வருகிறதே கிடையாது. அநேக டாக்டர்கள் சர்க்கார் கொடுக்கும் மான்யம் மாதம் ரூ. 41-10-8லேயே ஜீவனம் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு எலிமெண்டரி பள்ளிக்கூட உபாத்தியாயர் ரூ. 30-ல் ஒரு கிராமத்தில் ஜீவனம் செய்ய முடியாதிருக்கும் போது, ஒரு கிராம ஆஸ்பத்திரி டாக்டர் மாத்திரம் மாதம் ரூ. 41-10-8ல் குடும்பம் நடத்த முடியுமா? தவிர, இவர்களுக்கு சர்வீஸ், பிராவிடெண்ட் பண்ட், பென்ஷன் இம்மாதிரி எதுவும் கிடையாது. ஆகையால் நமது காங்கிரஸ் மந்திரிகள் இவர்களுடைய நெடுங்காலக் குறையை நிவர்த்திசெய்து இக் கிராம ஆஸ்பத்திரி டாக்டர்களுடைய மான்யத்தை உயர்த்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு கிராம ஆஸ்பத்திரி டாக்டர்.

கள்ளிடைக்குறிச்சி
16—9—46

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

தாங்கள் எங்கள் சங்கத்தில் 'கல்கி' பத்திரிகையை வெகு காலமாக வாங்கி வாசித்து வருகிறோம். தங்களுடைய சிவகாமியின் சபதம் என்ற கதையில் எங்களுக்கு ஒரு சந்தேகம். மேற்படி கதையில் தாங்கள் சிறுத்தொண்டராகிய பரஞ்சோதி பல்லவ அரசனிடம் சேனாதிபதியாக இருந்து வாதாபியை அழிக்கக் காரணமாயிருந்தார் என எழுதியிருக்கிறீர்கள். சமீபத்தில் தென்னிந்திய திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ள 'பட்டினத்தார் பாராட்டிய மூவர்' என்ற எட்டாவது வெளியீட்டில், பரஞ்சோதி சோழ மன்னனிடம் அணுக்கராய் இருந்தார் என்று எழுதப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் பெரியபுராணத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டதென விசாரித்ததில் தெரியவந்தது. இம் முரண்பாட்டைத் தாங்கள் 'வட்ட மேஜை'யில் விளக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்,
கிராம நண்பன் சங்கத்தார்.

[பல்லவ சக்கரவர்த்தி நரசிம்மவர்மருக்குத்தான் பரஞ்சோதியார் சேனாபதியாயிருந்து வாதாபிக்குப் படையெடுத்துச் சென்றார். இது சரித்திர ஆராய்ச்சியாளரின் சந்தேகமில்லாத முடிவு. 'சிறுத்தொண்டர் சோழ மன்னரிடம் வேலை பார்த்தார்' என்று பெரிய புராணத்தில் சொல்லப்படவில்லை. 'மன்னருக்கு நண்பு பூண்டு போய்' என்றுதானிருக்கிறது.


—ஆசிரியர்.]

வடபங்காறுடு
21—9—46

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

இப்பவும் உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் உயர்த்தி விருப்பதாய்க் கேள்வி. ஆனால் சென்ற எட்டுமாத காலமாகப் பஞ்சாயத்துப் போர்டு பள்ளிக்கூடங்களுக்குச் சம்பளமே கொடுக்கவில்லை. (தஞ்சை ஜில்லாவிலுள்ள மன்னார்குடி தாலுகாவில் உள்ள எல்லா பஞ்சாயத்து ஸ்கூல்களுக்கும்) இது விஷயம் கவனித்து வருவது இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்டு. இருந்தும், எங்களுக்குச் சம்பளத்தைக் கூட்டித் தருவதைக் காட்டிலும், உள்ள சம்பளத்தை ஒழுங்கான முறையில் மாதா மாதம் கொடுத்து வந்தால்கூடக் கொஞ்சம் கஷ்டம் தீரும். சம்பளமே கொடுக்கப் படாமல் இருந்தால் எப்படி வயிறு வளர்ப்பது? மளிகைக் கடைக்குக் கடன் சொன்னால் போதுமா? தவிர, பால்காரர்களுக்குக் கடன் சொன்னால் போதுமா? வண்ணான் முதலானவர்களுக்குக் கடன் சொன்னால் போதுமா? நம்முடைய பிரதிநிதிகள் அதிகாரத்துக்கு வந்ததும் சம்பளம் விரைவில் வருமென்று எதிர்பார்த்தோம். ஆனால் முன் அரசாங்கமே பன்மடங்கு மேல் என்றாகி விட்டது. இதை அதிகாரிகள் சற்றுக் கவனித்துக் கூடிய விரைவில் சம்பளம் பட்டுவாடா செய்வார்களாக. கஷ்டம் பொறுக்க முடியவில்லை.

இங்ஙனம்,
பி. ஆர். கி.


ப்ரூக் பாண்ட்



குழந்தைகள் பராமரிப்பைப்பற்றிய சிறிய புத்தகம் 4 அணாவுக்கு ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பெயரையும் விலாசத்தையும் எச். ஜே பாண்டர் & கோ. லிட்., த. பெ. 202, பம்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்புங்கள்





Edited, Printed and Published by R. Krishnamurthy at The "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras

கல்கி



KALKI அக்டோபர் 6, 1946 4 அண



பெரீஸ்
பேபி பிஸ்கட்ஸ்
குழந்தைகள்
குதூகலத்துடன்
விரும்புவது
PERRY'S
Perry's Biscuits
PERRY & COMPANY BISCUITS
BABY
Perry & Co., Usilampatti.
மதராஸ் ஸிடி ஏஜண்ட்ஸ்: சக்தி டிரேடிங் கம்பெனி
581, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்